# திராவிடநாடு

25—6—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## மீட்டிடுவோம் திராவிடத்தை!

[ எஸ். கே. வெங்கடேசன் ]

இன்றல்ல நேற்றல்ல நம்மவர்
இடித்துக் கேட்கும் திராவிடம்
அன்றே ஆமாமென தலையசைத்த
ஆசாமிகள் உளறுகிறார் கனவென
பண்பில்லை பாசமில்லை பகுத்தறிவு
பயனுமில்லை பதில்கூற வாயுமில்லை
நன்றியில்லா மனிதர்களின் கூட்டத்தை
நாடும் ஏடும் புகழாது.

ஏட்டில் எழுதும் கவிதையால்
ஏழைகளின் துயரம் தீராது
நாட்டிலுள்ள வறுமையை ஒழிக்கவழி
நானறிவேன் என்றால் நம்புவரோ
கூட்டத்தில் பேசிடும் பேச்சால்
கழகத்தின் தரங்கெட்டுப் போகாது
வீட்டுக்கு ஓர்பிள்ளை தந்தேனும்
மீட்டிடுவோம் மங்காத் திராவிடத்தை.

# தீயும் தென்றலும்

டி.கே.சீனிவாசன்.

உருவங்களை நிர்ணயிக்க முடியாத அந்த இரவு நேரத்தில் உலவுகிற உள்ளங்கள் எப்படியிருக்கும் என்பதைப்பற்றிய உணர்வே இல்லாத அந்த இரு பெண்களும் வேகம் வேகமாக நடந்தனர். போகவேண்டிய இடந்தான் அவர்கள் நினைவிலே இருந்தது; போய்க்கொண்டிருக்கும் பாதையைப்பற்றிய கவனமே இல்லை. பழக்கத்தால் இயங்கிக் கொண்டிருந்தன விமலாவின் கால்கள்; அந்தப் பாதையைப் பின்பற்றினாள் பத்மா. வாழ்வை நிர்ணயித்தே ஆகவேண்டும் என்ற கட்டத்தை அடையும்போது, சுற்றி வளைத்திருக்கிற அனைத்தையும் புறக்கணித்தே தீரவேண்டிய நிலை ஏற்பட்டுத்தான் தீரும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது அவர்கள் போக்கு. இணைத்திருக்கிற எல்லாவற்றையும் எடுத்தெறிந்துவிட்டு எதையோ நோக்கிப் பறந்துகொண்டிருந்தன அவர்கள் இதயங்கள். ஒரு பெண்ணின் வாழ்வில், அச்சம் நாணம் என்ற அணைக்கட்டுகளெல்லாம் எப்படி உடைபடுகின்றன, எப்போது எடுத்தெறியப்படுகின்றன என்ற ஆராய்ச்சியெல்லாம் அவர்கள் செய்யவேண்டிய தேவையே ஏற்பட்டதில்லை அதுவரை. நினைவுக்கே வராதவைகள் அன்று நிகழ்ந்துகொண்டிருந்தன.

கண்ணன் வீட்டை அடைந்தபோது, அவனிருந்த அறைக்கதவு திறந்தே இருந்தது. பத்மாவை மறைவில் நிறுத்திவிட்டு, விமலா மட்டும் சென்றாள். உள்ளே எவருமே இல்லை. திகைத்து நின்றவள் உடனே தெளிவடைந்து அறைக்குள்ளே தேடித் துளாவினாள். கண்ணனுடைய எல்லாப் பொருள்களும் அங்கே இருந்தன; அவன் மட்டும் இல்லை. திரும்பிப் பத்மாவிடம் வந்தாள்.

“ஆளைக் காணோமே.”

“கதவு திறந்திருக்கிறதே”

“எப்போதும் அப்படித்தான் இருக்கும். உடைமைகளைப் பாதுகாக்க நினைத்தால், ஓடிவந்து ஒளிந்து உடலைப் பாதுகாப்பது இயலாமல் போகும்.”

சிரித்தாள் பத்மா; அதைத் தடுத்தாள் விமலா.

“அந்தக் கடிதங்கள்.........”என்றாள் பத்மா.

“இரு வருகிறேன்,” என்றோடினாள் விமலா.

மூடப்பட்டிருந்த எல்லாமே திறக்கப்பட்டிருந்தன; சிதறிக்கிடந்த காகிதம் ஒவ்வொன்றும் சேகரிக்கப்பட்டது. பாம்புக்கும் தேளுக்கும் பயந்துகொண்டே காட்டில் மூலிகை தேடித் திரிந்தவன், பத்திரமாக அதைப் பறித்துக்கொண்டு திரும்பும்போது ஏற்படுகிற மனநிம்மதி விமலாவிடம் உருவானது. திரட்டிச் சேகரித்ததைப் பத்மாவிடம் கொண்டுவந்து சேர்த்தாள்.

“போகலாம், வா, பத்மா என்று சொல்லிக்கொண்டே நடந்தாள் விமலா.

“அவரைப் பார்க்கவேண்டாமா?” என்று கேட்டாள் பத்மா.

“பார்த்து ஆகவேண்டியது, பார்க்காமலே நடந்துவிட்டது. வெகுநேரம் கழிந்தால் விடிந்துவிடுமே” என்றாள் விமலா.

இரு தோழிகளும் வீடு நோக்கி நடந்தனர். உலகத்தின் உறக்கம் முக்கால் பகுதி கழிந்துவிட்டது. நீட்டிப்படுத்திருந்தவர்கள் உடலைச் சுருட்டிக்கொண்டு உறக்கத்தைத் தொடர்ந்தனர். தாளிடப்பட்ட வீடுகளுக்குள்ளே, பெண்கள் எழுந்து நடமாடுகின்றனர் என்பதைப் பாத்திரங்களின் ஓசைகள் அறிவித்தன. ஈன்றெடுத்த சேய்களைப் பால் கொடுக்க அழைத்தன பசுக்கள்; கட்டப்பட்டிருந்த கன்றுகள் கழிவிரக்கமற்ற மனிதகுலம் இழைத்த அநீதி பொறுக்காமல் கதறின. தனியே போவதற்கு எப்போதுமே அஞ்சும் காகங்களில் ஒன்றிரண்டு குரல்கொடுத்துத் தம் கூட்டத்தைக் கூப்பிட்டன. ஆண்கள் விழிப்பதற்கு முன்னால் அனைத்தையும் முடித்தாகவேண்டிய பெண்கள் இருவர் மூவராக எங்கோ சென்றுகொண்டிருந்தனர். தண்ணீர்க் குழாய்கள் தம்மிடத்தில் நிறைந்திருந்த காற்றை வெளியேற்றிக்கொண்டிருந்தன.

நிம்மதியாகக் காரியம் முடிந்துவிட்டது என்ற நினைவோடு வீட்டுக்குள் நுழைந்தனர் இருதோழிகளும். அங்கே உருண்டு கிடந்த எந்த உடலிலும் உணர்வேற்பட்டதாகத் தெரியவில்லை. அயர்ந்துபோனவைகளும் அணைந்துபோனவைகளாகவுமே அங்கிருந்த அனைத்தும் தோன்றின.

உள்ளே நூழைந்து அறைக்கதவைத் தாளிட்ட பிறகுதான் இருவருடைய மூச்சும் ஒரு ஒழுங்குக்குட்பட்டது.

“இப்போது என்ன செய்யப் போகிறாய், விமலா?” என்று கேட்டாள் பத்மா.

“இரு, வருகிறேன்” என்று எழுந்து வெளியே போனாள் விமலா.

தன்னையும் ஒரு அங்கமாக்கிக் கொண்ட நிகழ்ச்சிகளைத் தனக்கே புரியாமல் விமலா உருவாக்கிக் கொண்டுபோவது பத்மாவுக்கு

( 4-ம் பக்கம் பார்க்க )

# இதோ ஒரு எடுத்துக்காட்டு!

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (25—6—61) தனிப்பிரதி 16 காசு [இதழ்

ஒரு மொழியில் நல்ல பயிற்சி பெற்றுவிட்டால், அதனை, அப்படிப் பயிற்சிபெற்றவர் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறந்துவிடமுடியாது. அதிலும் வளமுள்ள ஒரு மொழியை வகையாகக் கற்ற ஒருவர் அதனை மறப்பதென்பது, முயன்றாலும் முடியாத ஒன்றாகும்.

ஆனால், சில மொழிகள் இருக்கின்றன. அவை, கற்கமுடியாதவை; கற்றாலும் கருத்திற்பதியாதவை.

சில மொழிகள் இருக்கின்றன. அவை பேசமட்டும் முடிந்தவை. எழுதமுடியாதவை. காரணம், அவற்றிற்கு இன்னும் எழுத்து வடிவம் உண்டாக்கப்படவில்லை.

சில மொழிகளுக்கு எழுத்தும் உண்டு; பேச்சு வழக்கும் உண்டு. ஆனால், சரியான இலக்கிய வளமோ, இலக்கண வரம்போ கிடையாது.

அப்படிப்பட்ட மொழிகளைக் கற்றால், அவை நினைவிலும் நில்லாது; நிலையான பயனையுந்தராது.

இப்படி, எழுதவும் முடிந்து, பேசவும் தெரிந்து, வளமான இலக்கியமோ, வரம்புகண்ட இலக்கணமோ இல்லாத மொழி வரிசைகளில் இந்தியும் ஒன்று என்பதை மொழி நூல் வல்லுனர் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்தி, ஒரு மொழிக்கு உரிய வாய்ப்பினையும் வளத்தினையும் பெற இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும் என்றும், அப்படி, அது ஒரு நல்ல மொழி வடிவத்தை எடுத்துக் கொண்டாலும், அது, ஒரு நாட்டின் பொதுமொழியாக ஆகும், அல்லது ஆக்கலாமென்பது முடியாத ஒன்றாகும் என்றும் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

என்றபோதிலும், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்போர், இந்தியே, இந்நாட்டின் பொதுமொழி என்று விளம்பரம் செய்து அதற்கான பெரு முயற்சிகள் பலவகையிலும்எடுத்துப்பார்க்கின்றனர்.

1965-ல் இந்திதான் இந்நாட்டின் பொதுமொழி என்றுஅறிவித்தனர்.

ஆனால், அது முடியாதென்று தெரிந்ததும், இல்லை, இல்லை, தெரிவிக்கப்பட்டதும், 1965-க்குப் பின்னரும் ஆங்கிலமே இந்நாட்டின் பொதுமொழியாக இருக்கும் என்று காலவரம்பு குறிப்பிடாமல் கூறிவிட்டனர்.

இந்தி வெறியர்களுக்கு இது ஒரு பேரிடியாகப் போய்விட்டது. இந்தியால் ஆதிக்கம்பெறக் கனவு கொண்டோரெல்லாம் கைபிசைந்து நிற்கும் காட்சி நமக்கு நன்றாகத் தெரிகிறது. என்ன செய்வது? அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதைவிட நம்மால் வேறென்ன செய்ய இயலும்!

ஏன், ஒரு வளமும் வாய்ப்புமற்ற மொழியை இந்நாட்டின் பொதுமொழி என்று விளம்பரம் செய்ய வேண்டும்? பின்னர் அது முடியாத காரியம் என்ற நிலை கண்டு கலங்கவேண்டும்!

இந்த இரங்கத்தக்க நிலை இந்திக்கு ஏற்பட்டும் இந்தி வெறியர்களுக்கு அதன்பாலுள்ள மோகம் குறைந்ததாகத் தெரியவில்லை.

அதனை எப்படியாது அரச பீடத்தில் உட்காரவைத்து விடலாமென்று இன்னும் சிலர் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர்.

அந்த முயற்சி இனிக் கைக்கூடி வராது என்பதற்கு நாமும் நடுநிலையாளர் பலரும் பற்பல மேற்கோள்களை எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

இதோ இன்னொரு எடுத்துக்காட்டை இங்கு குறிப்பிடுகிறோம்.

இந்தியில் தந்தி அடிக்கும் பயிற்சி பெற்றிருந்தனர் இருவர். இந்த இருவரும் ஒரு அஞ்சலகத்தில் வேலை பார்த்து வருபவர்களாம். அண்மையில் இந்தி மொழியில் ஒரு தந்தி வந்ததாம் அந்தத் தந்தியை அவ்விருவராலும் எடுக்க முடியவில்லையாம். காரணம், இந்தியில் தந்தி அடிக்கும் பயிற்சியை அவ்விருவரும் மறந்துவிட்டனராம்.

இந்த மறதியும் இரண்டாண்டு காலத்துக்குள் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு தந்தி இந்தியில் வந்ததை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதன் பின்னர் இந்தியில் தந்தியே வரவில்லையாம். எனவே மறந்துவிட்டார்களாம்.

எனவே, கற்ற ஒரு மொழியில் பயிற்சி, இரண்டாண்டுகள்கூட நிலைத்து நிற்க முடியவில்லை.

இந்தியில் தந்தி அடிக்கும் பயிற்சி பெற்றிருந்த அந்த இருவரும், இரண்டாண்டுகளாக இந்தியில் தந்தி எடுக்கும் வாய்ப்பினைப் பெறாத காரணத்தினால் அந்தப் பயிற்சியை மறந்துவிட்டார்கள்.

மறந்த காரணம் எதனால், எப்படி என்பதை அறிந்து, அதற்கு உரிய பரிகாரம் தேடும் வாய்ப்பினைப் பெற முடிந்தாலும், முடியாத நிலையில் அமர்த்தப்பட்டுள்ள அந்த இருவரின் மேலதிகாரி, அவ்விருவர்மீதும் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாதென்று கேட்டிருக்கிறாராம்.

இது, ஒரு ஆதிக்க ஆட்சியின் கீழ் அலுவல் பார்க்கும் ஒரு அதிகாரி எவ்வளவு பயந்து நடந்துகொள்கிறார் என்பதையே கண்ணாடிபோல் எடுத்துக் காட்டுகின்றது.

பயந்து வாழ்வதும், வாழ வைப்பதும் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்காதென்பதனை ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் உணரவேண்டும்—உணர்த்தப்படவேண்டும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

வேதனையாக இருந்தது. படிப்பவர்களுக்கு ஏற்படவேண்டிய ஆவல் கதாபாத்திரத்துக்கே ஏற்பட்டு விட்டால்......

அறைக்கு வெளியே யார்யாரோ பேசிக்கொள்ளுகிற ஓசைகள் கேட்டன. எவருக்கும் தெரியக்கூடாது போலத் தொடங்கிய உரையாடல்கள் எல்லோருமே கலந்துகொண்டதுபோல வளர்ந்தன. இருப்பதா அல்லது எழுந்து வீட்டுக்குப் போய் விடுவதா என்பது புரியவில்லைப் பத்மாவுக்கு. வெளியே எட்டிப்பார்த்தாள். விமலா தன்குடும்பத்தார் சூழ நின்றுகொண்டிருந்தாள்.

"இதை நேற்றே ஏன் சொல்ல வில்லை?'' என்று கேட்டார் விமலாவின் தந்தை.

"நீங்கள் செய்த ஆர்ப்பாட்டத்தில் யாரால்தான் பேசமுடியும்? அமைதியாகக் கேட்டால் சொல்லியிருப்பாள்'' என்று தன் கணவனுக்குச் சமாதானம் சொன்னாள் விமலாவின் தாயார்.

"மாப்பிள்ளைதான் மாட்டேன் என்று போய்விட்டாரே. இப்போது என்ன செய்வது?'' என்று யாரோ ஒருவர் கேட்டார்.

"அவன் போனால் போகட்டுமே. ஏதோ ஒரு காகிதத்தைப் படித்து விட்டு பெண்ணே வேண்டாம் என்பவன், இவளை வைத்துக்கொண்டு எப்படி வாழுவான்? கயிறு கழுத்திலே ஏறுதவரை போகிறவர்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.''—இது ஒருவர் பதில்.

"நாளைக்குக் காரியம் நடந்தாக வேண்டும்''—இன்னொருவர் கவலை.

"அழகு இருக்கிறது; படித்திருக்கிறாள்; பணமும் கிடைக்கிறது. ஆளா கிடைக்கமாட்டான்? காதுக்குக் காதாகச் சொன்னால்கூட ஒரு கூட்டமே வந்து காத்திருக்குமே'' இது ஒரு பெண்மணியின் விளக்கம்.

எல்லோரும் அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"ஏன், கமலம்! உன் பையன் தான் இருக்கிறானே. சொந்தக்காரர்களிடங்கூடச் சொல்லவேண்டியதில்லை. எல்லோருமே இங்கே இருக்கிறார்கள். முடித்துவிட்டால் என்ன?'' அந்தப் பெண்மணியைப் பார்த்துக் கேட்டார் வயதான ஒரு பெரியவர்.

"அவனை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?'' என்றாள் அந்த அம்மாள்.

"இங்கேதானே படுத்திருக்கிறான்; எழுப்பிக்கேட்டால் போகிறது'' என்று ஒருவர் சொன்னார்.

உடனே ஒருசிலர் அவனை அழைத்துவரப்போனார்கள். எழுப்பி அழைத்துவரப்பட்ட அந்த இளைஞனுக்கு முதலில் எதுவும் புரியவில்லை. எல்லோரும் ஒரே நேரத்தில் விஷயத்தை எடுத்துச்சொல்லத் தொடங்கியதால் குழம்பிக்கூடப்போனான்.

"நீ அவனிடம் தனியாகச் சொல்லு'' என்று அவன் தாயாரிடம் அந்தப் பெரியவர் சொன்னார்.

இருவரும் போனார்கள். மருத்துவ விடுதிக்குள் மனைவியை அனுப்பியவன் குழந்தையின் குரலுக்காக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பதுபோல எல்லோருமிருந்தனர். கூட்டமாக நின்றவர் தனித்தனியே பிரிந்து அவரவர் கருத்துக்களை எதிரே அகப்பட்டவரிடம் கூறிக்கொண்டிருந்தனர். நெடுநேரம் கழித்து அந்த அம்மாள் மட்டும் திரும்பிவந்தாள். குழுக்கள் மறுபடியும் ஒரு கூட்டமாக ஆக்கிக்கொண்டன.

"அவன் எழுதியிருந்தது உண்மையா அல்லது பொய்யா என்று தெரிந்துகொள்ள வேண்டாமா என்கிறான்'' என்றாள் அவள்.

"அவனையே பிடித்து மடக்கினால் போகிறது'' என்றார் ஒருவர்.

அந்த இளைஞனை இழுத்துக்கொண்டு ஒரு கூட்டமே கண்ணனைத் தேடிப்போனது.

மறுபடியும் அறைக்குள் உட்கார்ந்த பத்மாவுக்கு தூக்கம் கண்களைச் சுழற்றிற்று. படுத்தாள். அடைத்துக் கட்டப்பட்டிருந்த பையிலிருந்து உதறிவிடப்பட்டதைப்போல அவளுடைய அங்கங்கள் உணர்ந்தன. மண்டை ஓட்டுக்குள்ளே மட்டும் இரத்தம் வேகமாக ஓடுவதைப் போலத் தெரிந்தது. எல்லாம் குழம்பிக்கொண்டிருந்தன. இணைப்பிலிருந்து விடுபடத் தவிப்பதைப் போல நரம்புகள் துடித்தன. வேகம் சிறிது சிறிதாகத் தணிந்தது. ஏதோ ஒருவிதக் குளிர்ச்சி அவள் உடலில் நிறைந்தது. பிறகு 'அவள்' என்ற நினைவையே இழந்தது அந்த உடல்.

பிறகு யாரோ அவளைத் தட்டி எழுப்பினார்கள். அலங்கரித்துக் கொண்டு நின்ற விமலாவை அவள் பார்த்தாள்.

"எனக்குத் திருமணம் ஆகிவிட்டதடி'' என்று சொல்லிக்கொண்டே அவளைத் தழுவிக்கொண்டாள் விமலா.

"திருமணம்......?'' திகைப்பை வெளிப்படுத்தும் குரலில் கேட்டாள் பத்மா.

விமலா பதிலே சொல்லவில்லை. காணுமற்போன கைக்குழந்தையைக் கண்டுவிட்ட தாய்போலப், பத்மாவின் உடலைப் படாத பாடுபடுத்திக்கொண்டிருந்தாள். இன்பம் அழுகையாக வெளிப்பட்டது.

"அப்படியானால் கண்ணன்...?'' அதற்குமேல் கேட்கப் பத்மாவுக்கு மனம் வரவில்லை.

"அவனைக் கைது செய்துவிட்டார்கள். அநியாயமாக ஒரு பெண்மேல் பழி சுமத்தி அவள் வாழ்வைக் கெடுக்க முயற்சித்ததாக வழக்குப் போடப்போகிறார்கள்'' இதைச் சொன்னவள் விமலா அல்ல; அருகே இருந்த எவளோ ஒருத்தி.

கதாநாயகி செத்துப்போனாள் என்று முடிக்கப்பட்ட புத்தகத்தின் இறுதியில் "சுபம்,'' "மங்களம்'' என்று எழுதியிருப்பதைப் படித்தால் எப்படியிருக்குமோ அப்படியே இருந்தது பத்மாவுக்கு.

(தொடரும்)


விற்பனையாகிறது! வாங்கிவிட்டீர்களா!

## "தமிழ்"

ஜூன் இதழ் :: விலை 50 காசுகள்

*சிறப்பாசிரியர்*

**குன்றக்குடி அடிகளார்**

இலக்கியத்திலிருந்து, ஆராய்ச்சிக் கட்டுரைகள், சுவைமிகு சிறுகதைகள், தேன் தமிழ்க் கவிதைகள் இத்தனையும் உண்டு. அத்தனையும் தருவோர்—

ஞா. தேவநேயப் பாவாணர்
கா. அப்பாத்துரையார்
மு. வரதராசனர்
அ. மு. பரமசிவானந்தம்
மா. இராசமாணிக்கனர்
பூவை எஸ். ஆறுமுகம்
இருசூரான்
தமிழண்ணல்
கம்பதாசன்

**ஏடு முழுவதும் இலக்கிய மணங்கமழும்.**

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.

விவரங்களுக்கு:

**"தமிழ்"**
14, உஸ்மான் ரோடு
தி. நகர். சென்னை—17

காஞ்சீபுரம்

25—6—'61.

# தம்பி!

அவன் சிற்பி அல்ல—ஆனால் மனதை ஈர்க்கும் காட்சிகளைக் காணும்போதெல்லாம், என்றென்றும் காண்போருக்குக் களிப்பூட்டும் விதமாக, இந்தக் காட்சிகளைச் சிற்பி செதுக்கித்தரமாட்டானா! என்று எண்ணுவான்—ஏங்கக்கூடச் செய்வான்.

அகன்ற தாமரைமீது அமர்ந்து துயிலுறும் அன்னப்பெடை, குஞ்சுகளுக்குத் தீனியூட்டும் பறவை, கன்றின் முதுகைத் தன் நாவினால் தடவி மகிழும் பசு, ஏதோ அரவம் கேட்டுக் காதுகளை நிமிர்த்தியபடி, மிரட்சி கொண்ட கண்களுடன் நிற்கும் புரவி, களத்திலே ஏற்பட்ட வடு கண்டு நண்பன் விளக்கம் கேட்க, அதனைக் கூறிடும்போது கண்களிலே வீரக்களை சொட்டும் நிலையிலுள்ள போர் வீரன்,—இவைபோன்ற காட்சிகளைக் காணும்போதெல்லாம், சிற்பி இவைகளைச் செதுக்கி வடிவம் கொடுத்து, எப்போதும், அந்த அழகு காண்போருக்கெல்லாம் மகிழ்ச்சி தந்திடச் செய்யவேண்டும் என்று எண்ணுவான்.

சிற்பிகள் இருந்தனர்—அவர்களுக்கு இந்தச் சிந்தனை இல்லை! இவனுக்குச் சிந்தனை இருந்தது—ஆனால் அவன் சிற்பி அல்ல!!

"அன்னப்பெடையா? அலர்ந்த மலரா? அன்னமூட்டும் அன்னையா?—அழகாகத் தான் இருக்கும்—மிக அழகாக! ஆனால், வேலை நிரம்ப இருக்கிறது, ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு வேறு இருக்கிறது!!—என்று கூறுவர் சில சிற்பிகள்—உளியை எடுப்பர், ஏற்றுக்கொண்ட வேலைக்காக.

திறமை அற்றவர்களோ எனில், அங்ஙனம் எவரும் கூறார்! முகத்திலே ஏற்பட்டு விட்ட சுருக்கங்களை, அப்படியே சிலையில் வடிப்பதுதான் சிற்பிக்கு உள்ள அறம்! ஆனால் பணம் கொடுக்கும் சீமான், அதைக் கண்டால் சீறுவாரே! அவர் என்ன, தன்முகத்திலே காலக்கரம் கோடுகளை இழுத்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்கிறாரா!! அல்லது அவருக்குக் காதலி வேலை பார்க்கும் காரிகை அதனைக் கவனப்படுத்துவாளா!! தன் முகத்திலே ஒரு கெம்பீரம், ஒரு கவர்ச்சி இருப்பதாக அவர் எண்ணுகிறார் — சிற்பி அதனை அறிவானே! எனவே உள்ளதை உள்ளபடி காட்டினால், உயிரே போனாலும் போய்விடும். எனவே கலை பிறப்பிக்கும் கட்டளையைக்கூட மீறுகிறான்! சுருக்கமின்றிச் சிலை சமைக்கிறான்! கலைஞன் மீறக்கூடாத அறத்தை மீறுவதை எண்ணுகிறான், கவலை தாக்குகிறது, முகத்தில் சுருக்கம் விழுகிறது.

## அழியாச்செல்வம்

★

சீமான்களும் சீமாட்டிகளும் சிலேவடிவமெடுக்கின்றனர்! சிலேயைக் கண்டுவிட்டு, அவர்களேக் காண்பவர் ஏமாற்றமடைகின்றனர்! ஏமாற்றத்தை வெளியே எடுத்துரைக்கவும் இயலாத நிலே! பாராட்டுகிருர்கள், சிற்பியை! சிற்பிக்கோ, வேதனே, வெட்கம்!

இந்த வேதனேயும் வெட்கமும் போதாதென்று, காலத்தை வெல்லும் கவின்மிகு காட்சிகளே வடித்தெடுக்கச் சொல்கிருன்—வாழ்வுக்காக என்னென்ன பாடுபடவேண்டி நேரிட்டுவிடுகிறது என்பதறியாதான்! அன்னப்பெடையாம்! அழகு மயிலாம்! அலர்ந்த மலராம்!—ஆமாம்! இவைகள் செதுக்கப்படவேண்டியவைகள்தான். தெரியும். முடியும். ஆனுல், செதுக்கினுல், பலன்? உளி தூக்கும்அளவுக்குக்கூட உடலிலே வலிவு இராதே! பட்டினியல்லவா கிடக்கவேண்டி நேரிடும்!!

பாரேபுகழும்! கலே உலகே பாராட்டும்! — என்கிருன். புகழ்! தேன்!! ஆமாம்! ஆனுல், முதலில் பசிப்பிணியல்லவா போகவேண்டும்–பிறகல்லவா, தேனென இனிக்கும் புகழ்!!

ஏற்றமிகு எண்ணம் இருக்கிறது இவனுக்கு! நேர்த்திமிகு கலேத்திறன் இருக்கிறது நமக்கு!! ஆனல் வயிறு வேறு இருந்துதொலேக்கிறது!!–என்று எண்ணிக்கொள்வான், சிற்பி.

ஓடோடி வந்தான் இளேஞன் ஓர் நாள்! தைலம் போன கட்டைபோன்ற உடல், கல்லாமையைக் காட்டிடும் கண்கள் — இப்படி உள்ள சீமானேக் கட்டுடலும் கருணேபொழியும் கண்களும் உடையோனுக்கிக்கொண்டிருக்கிருன் சிற்பி! உளிக்கு வாயுண்டா, ஏன் இந்த அக்ரமம் என்று கேட்க!!

"அருமையான காட்சி! அகிலம் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டிய காட்சி"

"களிநடமிடும் கன்னியைக் கண்டாயோ?"

"இல்லே, சிற்பியாரே! கன்னியை அல்ல! ஒருகாளேயைக் கண்டேன்."

"நம்நாட்டு வீரனே?"

"காளே, சிற்பியாரே! காளே! வீரன் அல்ல!"

"உண்மையான காளேயா? அதிலென்ன அருமை கண்டனேயோ?"

"சிற்பியாரே! என்னென்று கூறுவேன் அதனே. காளே வலிவுள்ளது! அழகானது! சந்தனமரத்தைத் தழுவிக்கொண்டுள்ள ஒரு பச்சைக் கொடிமீது இச்சை கொண்டு, இடையே படர்ந்திருந்த நச்சுக்கொடிகளேக் காணுமல், பாய்ந்து சென்றது. கொடிகள், காளேயின் கால்களே இறுக்கிக்கொண்டன! விடுபடப் பலம் கொண்டமட்டும் முயற்சி! முயற்சிக்க முயற்சிக்க, கொடிகள் காலிலும், கழுத்திலும் சுற்றிக்கொண்டன! திணறும்நிலே காளேக்கு! அரிமாவோ என்று எண்ணுவர், அதன் அலறல் ஒலிகேட்டு! சுற்றிக்கொண்டுள்ள கொடிகளே அகற்றப் போராடுகிறது போராடுகிறது, காலால், கொம்பினுல், கொடிகளே அறுத்தெறிந்தபடி! கண்களிலேகூட நீர் வடிகிறது, முள் குத்தியதால்! உடலெங்கும், கொடியிலுள்ள முட்கள், கீறியதால் இரத்தத் துளிகள்! காளே, கருப்புநிறம்! இரத்தத்துளிகள் உடலிலே! சிறிது நேரத்திற்கெல்லாம், கருப்பும் சிகப்பும் கலந்ததோஎன்று எண்ணத்தக்கவிதமாயிற்று, உடல்."

"பொறு! பொறு! சந்தனமரம்! அதிலே பச்சைக் கொடி! பாயும் காளே! அதனேப்பற்றிக்கொண்ட கொடிகள்! விடுபடக் காளே போரிடுகிறது! அற்புதமான காட்சிதான். சிலே வடிவமாக்கினுல், கலே உலகே புகழும்."

"ஓடோடி வந்தேன், கூற"

"போராடும்காளே எனும் சிலே வடிக்கச் சொல்லத் தானே!"

"அல்ல! காளேயின் நிலேயைப் பார்த்ததும், எனக்கு, வேருேர் நினேவு வந்தது."

"என்ன நினேவு?"

"அடிமைப்படுத்தப்பட்ட வீரன்! கட்டுண்டு கிடக்கிருன் தளேகளால்! தளேகளே அறுத்தெறிந்து விடுதலே பெறப் போரிடுகிருன்! கட்டுடலேச் சுற்றிக்கொண்டிருக்கும் இரும்புச் சங்கிலிகளே, உடலே வளேத்தும் நெளித்தும், அறுத்தெறிய முயல்கிருன். அப்படியொருசிலே, சமைக்கவேண்டும். கொடுமைப்படுத்தப்படுவோர் எங்கு இருப்பினும், அடிமைப்படுத்தப்பட்டோர் எவரெனினும், அந்தச் சிலேயைக்கண்டதும், வீரம் கொப்பளிக்கும்—விடுதலே ஆர்வம் பீறிட்டெழும்."

•

சிலேகண்டு, சிற்பியே மகிழ்ந்தான்! சிந்தனேயாளன், வானத்து நட்சத்திரங்களே எல்லாம் பறித்தெடுத்து மாலேயாகத் தொடுத்து, உமக்கு அணிவிக்கும் திறம் எனக்கு இல்லேயே என்ருன். உன் புகழுரை அதனினும் மிகுதியானது என்ருன் சிற்பி. ஊர் நடுவே சிலேயை அமைத்தனர், அனேவரும் காண! கண்டனர்! கண் சிமிட்டினர்! அவரவர் தத்தமது அலுவலேக் கவனிக்கச் சென்றனர்.

கண்டவர், வைத்த கண் வாங்காமல் நிற்பர்! பாராட்டுவர்! உற்ருர் உறவினரையும் நண்பர்களேயும், அழைத்துவந்து காட்டுவர்! இந்த அருமையான சிலேயை வடித்தெடுத்த சிற்பியைக் காணத் துடிப்பர்—அவன் பணிமனேயைக் கலேக்கோயில் என்று புகழ்வர்! என்றெல்லாம், சிந்தனேயாளன் எண்ணினுன்.

கல்லால் ஆன சிலேயா இது! உயிருடன் ஓர் வீரன், தளேகளே அறுத்தெறியப் போராடுவது போலவே யன்ருே தெரிகிறது!—என்று பலரும் பேசுவர்! காட்சி கற்பனேயா, எங்கேனும் நடைபெற்ற வீரச் செயலா? என்று கேட்பர்! கொடியினே அறுத்தெறியப் போரிட்ட காளேயைக் கண்டதால் எழுந்த சிந்தனே, இச்சிலேயாயிற்று எனச் செப்பி மகிழலாம், என்று எண்ணினுன் சிந்தனேயாளன்.

அவரவர்கள், அவரவர் அலுவலேக் கவனிக்கிருர்கள்—சிலேயைப் பார்த்துவிட்டு!

புன்னகை செய்கிருர்கள்—சிலர் பெருமூச்செறிவதும் தெரிகிறது! ஆனுல், சொக்கிப் போய் நிற்க

வில்லை! வியப்புடன் விளக்கம் கேட்கவில்லை! வேலைகளைக் கவனிக்கிருர்கள். வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக்கொண்ட வேலைகள்! வயிறு இருக்கிறதே!!

சிற்பிகூட இதைத்தானே முன்பு சொன்னுன்; சிந்தனையாளன், அதை எண்ணிக்கொண்டான்.

கலைக்கூடம் சென்று, கன்னத்தில் கை வைத்தபடி உட்கார்ந்தான்.

"கவலை எதற்காக அப்பா!"

கருத்தற்ற மக்கள்! கலை அறிவு துளியுமற்ற மக்கள்! கண்ணற்ற மக்கள்!"

"கண்ணற்றவர்கள் அல்ல அப்பா! கண் இருக்கிறது காண! ஆனல், வயிறு இருக்கிறதே!"

"வயிறு! வயிறு! வயிறு! கேட்டுக் கேட்டுக் காது குடைகிறது, இந்தப் பேச்சை."

"காது கேட்காது! கண் பஞ்சடைந்து விடும் வயிறு காய்ந்தால். அதைத் தெரிந்துதான், கண்டுவிட்டு, அவரவர் வயிற்றுப் பாட்டைக் கவனிக்கச் செல்கிருர்கள்."

"வாயாரப் பாராட்டினுல் என்னவாம்? கலை அறிவு இருந்தால்தானே!"

"கலை அறிவு இருக்கிறது, கண் இருப்பதால். ஆனல், பாராட்ட நேரம் இல்லை! வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு இருக்கிறதே!"

"ஊரே திரண்டு நின்று புகழப் போகிறது என்று எதிர்பார்த்தேன்."

*

சிற்பியும் சிந்தனையாளனும் பேசிக்கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டிருந்த உளி ஏந்துவோன், களுக்,கெனச் சிரித்தான். இருவரும் திரும்பிப் பார்த்தனர்; சிந்தனையாளன் சீற்றத்துடன்; சிற்பி, ஏதும் புரியாத நிலையில்.

*

"மன்னிக்கவேண்டும்"

"அடக்கம் போதும்! சிரித்த காரணம்?"

"தங்கள் பேச்சுக் கேட்டுச் சிரிப்பு......"

"வயிறு எரிந்து பேசுகிறேன் நான்; உனக்குச் சிரிப்பு வருகிறது. உம்!"

"கோபம் கொள்ளாதீர் ஐயா! சிலையைக் கண்டு ஊரே திரண்டு நின்று கொண்டாடும் என்று எதிர்பார்த்ததாகச் சொன்னீர்கள்..."

"ஆமாம்! எதிர்பார்த்தது தவரு? சிலை, அத்தகைய பாராட்டுதலைப் பெறத்தக்க ஏற்புடையது அல்லவா?"

"என் ஆசானின் திறமையை நான் நன்கு அறிவேன். சிலை, முதல் தரமானது! எவரும் கண்டு பாராட்டத்தக்கது. ஐயம் எவர்க்கும் எழாது! பாராட்டத்தக்க நிலையில் உள்ள சிலையைப் பாராட்டுவது தங்கள் கடமை என்று அறியும், உணர்வு, மக்களில் பெரும்பாலாருக்குக் கிடையாது..."

"பாராட்டத் தெரியாது—அதாவது, நான் சொன்னபடி, மக்களுக்குக் கலை அறிவு இல்லை."

"கலை அறிவு எப்படிப்பட்டது என்று எடுத்துரைக்கத் தெரியாது. ஆனல் கலை அறிவே இல்லை என்று பொருள் கொண்டு விடக் கூடாது. மேலும், மிக நேர்த்தியாகத் தான் இருக்கிறது என்று மனதிலே எண்ணிக் கொள்வார்கள்—பேசமாட்டார்கள்!"

"அதுதான் தவறு என்கிறேன்."

"அதுதான் மக்கள் இயல்பு!"

"அழகு சிலையைக்காண்பது; வாய்மூடிக் கிடப்பது! இது ஒரு இயல்பா!!"

"ஊரே வியப்புற்று ஓடோடி வந்து சிலையைக் கண்டு, அதுபற்றிப் பரபரப்புடன் பேச வேண்டும் என்கிறீர்."

"எதிர்பார்த்தேன்!"

"ஏமாற்றம் அடைந்தீர்! எரிச்சலும் கொண்டுள்ளீர்."

"ஆமாம்! ஊரே இந்தச் சிலைபற்றியே பேசவேண்டும் — மற்ற எதனையும் மறந்து! என்று எதிர்பார்த்தேன்."

"பேசச் செய்கிறேன்"

*

உளி ஏந்துவோனின் இந்தப் பேச்சைக் கேட்டுச் சிற்பியும் சிந்தனையாளனும் திடுக்கிட்டுப்போயினர்.

சிற்பி, சிந்தனையாளனுக்கு ஆறுதல் கூறினன்—ஆனல், அவன் மனமும் குமுறிக்கொண்டுதான் இருந்தது. கலைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது சிலை! எனினும், வியப்பை, மகிழ்ச்சியை, புகழுரையைக் கூற எவரும் துடிதுடித்துக்கொண்டு வராதது, சிற்பிக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. இவ்வளவுதான் மக்கள்! என்று எண்ணிக்கொண்டான். சலிப்பு!

கட்டுடல் மட்டுமல்ல, தசைகளை அறுத்திட முனையும்போது, நரம்புகள் எவ்விதம் புடைத்து இருக்குமோ அந்த நுணுக்கம்கூடத் தெரிந்தது சிலையில்! ஒருபுறமுள்ள தசை அறுபடும்நிலை ஏற்படும்போது, புன்னகை! ஆனல், அதேபோது வேருேர்புறம், தசை சதையை மென்று தின்றுவிடுவதுபோல இறுக்கிக்கொண்டிருப்பதால் வேதனை! இரண்டுமே, சிலையிலே காட்டினுன் சிற்பி!

சிலை சமைப்பதிலே, தான் காட்டியுள்ள திறமையை சிலையின் தரத்தைக் குறித்து எவரும் பேசாதது, சிற்பிக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஊரே திரண்டுவந்து பாராட்டும் என்றுதான், அவனும் எதிர்பார்த்தான்.

வீரன்—கட்டுண்டவன்—தளை அறுத்தவன் — இந்நிலையுள்ள சிலைகளைப் பலரும் சமைத்தனர்—முன்பு.

இந்தச் சிலை, ஒவ்வொரு சிலையிலும் காணக்கிடக்கும் சிறுசிறு குறைகளை நீக்கி, ஒவ்வொன்றிலும் விளங்கிய அழகைக்கூட்டிச் சமைக்கப்பட்டது.

இந்தச் சிறப்பியல்பை எடுத்துக்காட்டுவர் என்று சிற்பி எதிர்பார்த்தான்.

சீமாட்டியின் சிலையாக இருந்தால், பொன்னும் பொருளும் கொடுத்திருப்பார் சீமான்.

இந்தச்சிலை சமைத்தபோது, எவரிடமும் பொன்னும் பொருளும் எதிர்பார்க்கவில்லை.

அரண்மனையோ, மாளிகையோ, இந்தச்சிலை தமக்குரியது என்று உரிமை கொண்டாடப்போவதில்லை.

இது வீரனின் சிலை! விருதுபெற்ற வீரன் அல்ல! வேந்தர் அவையில் உயர் இடம் பெற்ற வீரன் சிலை அல்ல! கட்டுண்ட வீரன் — விடுதலை பெறத் துடிக்கும் காளை—தளைகளை அறுத்திடும் முயற்சியில் தன்முழுவலிவையும் ஈடுபடுத்திய நிலையிலுள்ள வீரன் சிலை! இதை, மன்னர் மகனே, மாளிகை உடையோனே, பாராட்ட எப்படி முடியும்! வீரர்கள்! விடுதலைவிரும்பிகள்! தளைகளின் கொடுமையைக் கண்டவர்கள்! உரிமைக்காகப் போரிடத்துணிந்தவர்கள்! இவர்களுக்கு மட்டுமே, இதன் அருமை தெரியும்! பாராட்டத்தோன்றும்!

மக்களே, இதன் மாண்பு அறியத்தக்கவர்கள்.

மக்கள், மன எழுச்சி பெறவே, இந்தச் சிலை!

இந்தச்சிலை காட்டும் வீரத் திரு உருவமே, மக்களை மாக்களாக நடத்திடும் மமதையாளரை அழித்தொழிக்கும் மாவீரத்தை மக்களுக்கு ஊட்டவல்லது!

சிலை இத்தகைய எழுச்சியூட்டும்; இது கல்லில் எழுதப்பட்டுள்ள காவியம்! என்று மக்கள் கூறுவர்; சிலைக்கண்டதும், கண்களிலே ஓர் புத்தொளி தோன்றும்! வீரம் கொப்பளிக்கும் நெஞ்சத்திலே! கூனிக் கிடந்தவன் நிமிர்ந்து நிற்பான்! அஞ்சிக் கிடந்தவன் கெஞ்சி நின்றவன், பஞ்சை அல்ல நான்! கோழை அல்ல நான்! கொடுமையை எதிர்ப்பவன்! உரிமைக்காகப் போராடுபவன்!—என்று முழக்கமிடுவான். மனிதன் வீரனாவான்! மமதையாளன் அச்சம் கொள்வான்! சிலைமூலம், சிறப்பானதோர் பாடம் தருகிறோம்—என்றெல்லாம் சிற்பி எண்ணாமலில்லை.

ஆனால், மக்கள்? பார்த்தனர் நன்றாகத்தான் இருக்கிறது என்றுரைத்தனர்—மறுகணமோ, ஏருடன் சென்றான் ஒருவன், எருது தேடிச் சென்றான் இன்னொருவன்; பருகச் சென்றான் ஒருவன்; பண்டம் பெறச்சென்றான் மற்றொருவன்—ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையில் ஈடுபட்டனர்! என்ன செய்வர்! வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு இருக்கிறது! அது வேறு!!

மக்களின் இந்த அக்கரையற்ற போக்குக்கண்டு மனம் கொதித்த சிந்தனையாளனுக்கும், அதை மறைத்திட முயன்ற சிற்பிக்கும், உளியேந்தி திடுக்கிடத்தக்க பேச்சல்லவா, சொன்னான்-ஊரே பேசத்தானே வேண்டும் சிலையைப்பற்றி? பேசவைக்கிறேன்!! என்று. எப்படி? என்று இருவரும் யோசித்தனர். உளியேந்தி திட்டம் வகுத்துக்கொண்டான்:

•

'விர்'ரென்று பறந்துவந்து வீழ்ந்தது ஒரு கல்! சிலை மீது! 'கல்'லென்ற ஒலி கேட்டது! வழியே சென்றோர், திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தனர்! சிலைமீது பட்டுத் தெறித்தது, கல்!!

யார் இந்தக் காரியம் செய்தது?
என்ன ஈனத்தனமான காரியம் இது?
கல்லெறியும் கயவன் யார்?
சிலை, இவனை என்ன செய்தது?
சீற்றத்துக்குக் காரணம் என்ன?
சீற்றமா, புத்தித் தடுமாற்றமா?
ஏமாளியா! அல்லது எவரேனும் ஏவிவிட்டனரா?

இவ்விதமான பேச்சு எழுந்தது! கற்கள், 'விர்விர்'ரெனப் பறந்துவந்து, சிலைமீது விழுந்தவண்ணம் இருந்தன!

கற்கள் சிறியவை—சிலை பெரிது! கற்கள் வீழ்வதால் ஓசை கிளம்பிற்று—சிலைக்குச் சேதம் இல்லை!

மக்கள் பரபரப்பு அடைந்தனர்! இங்குமங்கும் பதறி ஓடினர்! எதிர்ப்பட்டோரிடம் கூறினர்!

சிலைமீது கல்லெறிகிறார்கள்!
சிலையை உடைக்கிறார்கள்!
சிலை உடைகிறது!
சிலையை உடைத்துவிட்டார்கள்!
அடடா! சிலை அழகானது என்று மகிழ்ந்தனரே!
அற்புதப் படைப்பு என்றனர் அறிந்தோர்!
ஊர் நடுவே அழகாக அமைந்திருந்தது!
உடையக்கூடியதல்லவே, அந்தச்சிலை!
அப்படிப்பட்ட சிலைக்கும் ஆபத்து வந்ததே!

ஊரில், இதுபோலப் பேச்சு; பல்வேறுவகையாக. பலரும், சிலையைக் காண ஓடோடி வந்தனர்; முன்பு கண்டதைவிட அக்கரையுடன் பார்த்தனர்; அழகு கண்டு வியந்தனர்!

இதை உடைக்கவும் மனம் வந்ததே!

காதகன்! தன்னால் இப்படிப்பட்ட நேர்த்தியான சிலை செய்யமுடியவில்லையே என்ற பொருமை!

சிலை செய்த சிற்பிக்கு நாடு சிறப்பளிக்கும்; தனக்குக் கிடைக்காதே என்ற காய்ச்சல்!

கெடுமதி! சிலை, பொதுச்சொத்து! கலைக் கருவூலம் என்ற பேரறிவு இல்லாதானின் பேய்ச் செயல்!!

கூடிநின்றோர், பேசினர் இதுபோலெல்லாம்.

வீசிய கற்கள் கீழே சிதறிக்கிடந்தன

"பார்த்தீர்களா! சிலை பொடிப் பொடியாகி விட்டது."

என்றான் ஒருவன்; அவசரமாக முடிவுக்கு வரும் இயல்பினன்.

"ஆமாம்! சிலை உடைந்ததால்தான், இந்தக் கற்கள் சிதறிக்கிடக்கின்றன"

என்றான், மற்றொருவன்.

மூன்றுமவன், சிலையை உற்று நோக்கினன்! சிதையாமல் நின்றுகொண்டிருந்தது!

கீழே பார்த்தான்; கற்கள்! சிலையின் கண்ணோ, கையின் துண்டோ! காதோ! காலின் துண்டோ!—எது உடைந்துபோயிற்றோ, என்று பார்த்தான். அதது அப்படி அப்படியே இருந்திடக்கண்டான்.

"இவை கற்கள்! வீசப்பட்ட கற்கள்! சிலை மீது சீற்றத்தால் சிற்றறிவினனுனவன் வீசினனே, அந்தக் கற்கள்! சிலை உடைக்கப்பட்டதால் சிதறி வீழ்ந்த கற்கள் அல்ல! சிலையைப் பாருங்கள், மீண்டும்! சரியாகப் பாருங்கள்! பழுதுபடாமல் இருக்கிறது கலை அழகுடன்!

பிறகு, மற்றவர்களும் உற்றுப் பார்த்தனர் — உண்மை புரிந்தது. சிலை கெடவில்லை!

சிலையை உடைத்துவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத்தீயெனப் பரவவே, ஊரேதிரண்டது, சிலை எதிரில்!

முன்பு அதே சிலையைப் பார்த்திருக்கிறார்கள்; ஆனல், அதுபற்றி அதிகமாகப் பேசினதில்லை.

இப்போது, அதே சிலை! அதே மக்கள் பார்க்கிறார்கள்; பார்த்துவிட்டு நிரம்பப் பேசுகிறார்கள்.

ஊரே திரண்டுவந்து பார்க்கிறது சிலையை! ஊரார், சிலைபற்றியே பேசுகிறார்கள்.

அவசரத்தில், சிலை உடைந்துவிட்டது — பொடிப் பொடியாகிவிட்டது — என்று பேசுகிறார்கள். பிறகோ கூர்ந்து பார்க்கிறார்கள்; வீழ்ந்து கிடப்பவை வீசப்பட்ட கற்களே என்பது புரிகிறது; சிலை, உடைபடாமல் இருப்பதைக் காண்கிறார்கள்.

உடைந்துபோய் விட்டது என்று நினைத்தோம், சிலை உடைபடவில்லை!

கற்களைச் சரமாரியாக வீசித்தான் பார்த்தார்கள், சிலைமீது வீழ்ந்தன; ஆனல், சிலை உடைபடவில்லை! வீசப்பட்ட கற்கள், மூலைக்கு மூலை வீழ்ந்து கிடக்கின்றன!

ஊர் மக்கள் இதுபோல் பேசத் தொடங்கிச் சிலை உடைபடாத தன்மைபற்றித் துவக்கிச் சிலையின் அமைப்பு, நேர்த்தி, தரம், சிற்பியின் திறம், சமைத்த நோக்கம், சிலை தரும் எழுச்சி என்பனபற்றியெல்லாம் பேசலாயினர்.

சிற்பியும் சிந்தனையாளனும், ஊரே சிலைபற்றிப் பேசுவது கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

உளி ஏந்தி, வீசியதுபோக, மீதம் உள்ள கற்களைக் காட்டி, "எப்படி என் வேலை?" என்று கேட்டுச் சிரித்தான்!

"கற்களை வீசியவன் நீதானு?"

"ஆமாம்! வேறு யாருக்குத் தெரியும் அந்தத் தந்திரம்?"

"எந்தத் தந்திரம்?"

"அக்கரையற்றுக் கிடந்த ஊர் மக்களைச் சிலையைப்பற்றி இவ்வளவு பேச வைத்தேன் அல்லவா? கற்களை வீசி!"

"அதற்காகவா, இந்த வேலை! அக்ரமக்காரா! சிலைக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டுவிட்டிருந்தால்?"

"ஏற்படுமா? எனக்குத்தெரியாதா, சிலையின் வலிவு; நான் வீசும் சிறு கற்கள் எப்படிப்பட்டவை என்பது. மேலும் வீசுபவன் யார்? நான்! வேகம் எப்படி இருக்கும் என்பதும் தெரியுமல்லவா?"

"சிலை உடைந்துவிட்டது என்றே நான் பயப்பட்டுப் போனேன்."

"நீங்கள் பயப்பட்டதுகிடக்கட்டும். ஊரே பயந்து போயிற்றே!"

"ஆமாம்! சிலை நொருங்கிவிட்டது என்று எண்ணிக்கொண்டுதான், ஓடோடி வந்தனர் ஊர் மக்கள், திரள் திரளாக!"

"ஊர் மக்களுக்குப் பீதி ஏற்படும் விதமாக, நான்தானே, வதந்தி கிளப்பினேன்! சிலை உடைந்துவிட்டது! உடைக்கப்பட்டாகிவிட்டது! சிதறிச், சிறு சிறு கற்களாகக் கீழே வீழ்ந்துவிட்டது என்றெல்லாம்.'

"ஊர் மக்கள், சிலையைப்பற்றி அக்கரையற்று இருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இப்போதல்லவா தெரிகிறது, ஊராரின் நினைவு, சிலைபற்றியேதான் இருந்து வந்திருக்கிறது என்ற பேருண்மை."

"இதை அறிந்துகொள்ள நல்ல வாய்ப்புக் கிடைத்தது."

மூவரும், எழுச்சிகொள்ளும் விதமாக, ஊரார், சிலையின் நேர்த்தி குறித்தும், சிற்பியின் திறம்பற்றியும்; சிலையைக் காண்போர் பெறும் எழுச்சிபற்றியும் பேசி மகிழ்ந்தனர்.

•

தம்பி! திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிட நாடு எனும் திட்டத்தையும், தாக்கித் தகர்த்திட எண்ணிப் பலர் வீசிய இழிமொழியும் பழிச்சொல்லும், இந்தக் கதையில் வரும், உளியேந்தியின் வேலைமுறை போன்றது என்று எண்ணத்தக்கவிதத்தில், ஒவ்வொரு தாக்குதலின் போதும், ஊரே திரண்டுவந்து கழகத்தைக்கண்டு, கலகலத்துப் போய்விடவில்லை என்பதை அறிந்து, கழகத்தின் 'தாங்கும் சக்தி' குறித்துப் பேசிடுவதைக் கேட்கிறோம்.

ஒரு மாறுபாடு; அதனை நான் மறந்திடவில்லை.

கதையில் வரும் உளியேந்தி, உள்ளபடி, ஊர் மக்களைத் திரட்டத், தந்திரம் கடைப்பிடித்தான்; அதற்கே கல் வீசினன்

கழகத்தின்மீது இழிமொழியும் பழிச்சொல்லும் வீசுவோர், அது போன்றோர் அல்ல.

ஆனல், தமது முயற்சிகள் முறிந்துபோனதை உணர்ந்த பிறகு, அவர்களிலே. சிலரேனும், கழகத்துக்குத் தாங்கும் சக்தி எவ்வளவு இருக்கிறது! ஊரார், கழகத்தைப்பற்றி எந்த அளவுக்கு அக்கரை காட்டுகிறார்கள் என்பதை, நாம் விளங்கிக்கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே, பகை கக்குவதுபோல, எதிர்ப்பு நடத்துவதுபோல, ஏளனம் செய்வதுபோல, நடித்தோம், என்று பேசக்கூடும்.

இதிலே, இவர்தம் போக்கிலே, எது நடிப்பு? எது உயிர்த் துடிப்பு? எது கொண்டகோலம்? எது நிலைத்த தன்மை? என்று கண்டறிவது கடினம்; எனினும், கழகத்

தின் தாங்கும் சக்தி வளர்வேண்டும் எனில், சில ஆண்டுகளுக்கு ஒருமுறை, இப்படிப்பட்ட, இழிமொழி, பழிச்சொல், கழகத்தின்மீது வீசப்படவேண்டும்! மாற்றூர் வீசுவதைக் காட்டிலும், உற்றாராக இருந்தோர் வீசுவதுதான், கழகத்தின் தாங்கும் சக்தியை நாம் கணக்கெடுக்க மெத்தவும் பயன்படும்.

அந்தக் கட்டம், திடீரென்று முளைத்தது; வேகமாக வளர்ந்தது; இப்போது முடிவடையும் தருவாயிலிருக்கிறது.

சிலைமீது கல் வீசப்படுகிறது என்ற உடன், சிலை உடைந்துவிட்டதாமே என்று பேசியபடி, ஊரே திரண்டு வந்து, சிலை எதிரே நின்றதுபோல, இப்போது, அரசியல் வட்டாரங்கள் அனைத்தும், ஏடுகளில் பலப்பல, திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து, அக்கரை காட்டாது இருந்த கோலம் கலைக்கப்பட்ட நிலையில், ஒவ்வொரு கணமும் கழகத்தைப்பற்றியே, நினைப்பாக இருப்பது காண்கிறோம்.

**இசைவாணன், சத்தமாகக் கொட்டாவி விட்டால்கூட, இது ஒரு தனி இராகமோ! என்று எண்ணிக்கொள்வார்களாம்!**

அதுபோல, இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினரின், பேச்சு, நடவடிக்கை எதுவாக இருப்பினும், அரசியல் வட்டாரங்கள் ஆய்வுக் கூடங்களாகின்றன; செய்தி திரட்டுவோர் துப்பறிவோராகின்றனர்; ஒவ்வொரு அங்க அசைவுக்கும், இறப்பை துடிப்புக்கும், பொருள் யாதாக இருக்கமுடியும் என்று பொருள் தேடுகின்றனர்; பொறுப்பு மிக்கவர்கள்!!

**பெரும்பகுதி, பீதி கிளப்பவும், பிளவு மூட்டவும்தான் எனினும், எனக்கு ஒரு மகிழ்ச்சி — உலகிலேயும் சரி, இங்கேயும் சரி, ஓராயிரம் நிகழ்ச்சிகள் உள்ளன; குலுவிலே 'குளு குளு' வாசம் செய்யும் நேரு; வங்க அசாம் வல்லடியால் ஏற்பட்ட கொதிப்பு; பாஞ்சாலத்திலே உருவாகிக் கொண்டுள்ள பரபரப்பு; காஷ்மீர்பற்றி அயூப்கான் காட்டும் கண்டிப்பான போக்கு; என்று எண்ணற்ற நிகழ்ச்சிகள் உள்ளன; எனினும், இவைகளுக்கெல்லாம் இடம் கிடைப்பதே இப்போது கஷ்டமாகிவிட்டது; கழகத்தைப்பற்றிய செய்திகள், செய்திகளுக்கு விளக்கங்கள்; கழகம் குறித்து ஆரூடங்கள்; கழகத்தில் இவருடைய சிரிப்புக்கு என்ன பொருள்? அவருடைய சீற்றத்துக்கு என்ன காரணம்? என்ற ஆராய்ச்சியுரைகள், ஆகியவைகளுக்கு அளித்ததுபோக, மிச்சம் இருக்கும் இடத்திலேதான், குருஷேவும் கென்னடியும், நேருவும் மொரார்ஜியும், அனுகுண்டும், வியன்னுவும், சகாராவும் சஞ்சீவ ரெட்டியும், பக்ராவும், பண்டார நாயகாவும், குடியேற வேண்டி இருக்கிறது!!**

நான் அறிந்த வரையில், ஒரு கட்சிக்காகத் தம்மை ஒப்படைத்துள்ள ஏடுகள், வேறோர் கட்சியின் பாதக் குறட்டின் அளவிலிருந்து கூடிப் பேசும் நிகழ்ச்சி வரையில், நேரத்தை, நினைப்பை, இத்தனைபெரிய அளவுக்குச் செலவிடுவது இதுதான் முதல்முறை என்று எண்ணுகிறேன். அதிலும், நேற்றுவரை நெரித்த புருவத்துடன், அது ஒரு கட்சியா! அதற்கு எமது இதழிலே இடமா! வேறு வேலையா இல்லை எமக்கு!! என்று, மாமேதைகள் போலக் கோலமணிந்து கொண்டிருந்த ஏடுகள், இன்று, பக்கத்துக்குப் பக்கம், கழகத்தைப் பற்றியே வெளியிட வேண்டி வருகிறது!

அது ஒரு கட்சியா! என்று அவ்வளவு ஆணவங் கலந்த அலட்சியம் காட்டி வந்தோமே, இன்று விழுந்தடித்துக்கொண்டு போகிறோமே, என்ன வீசுவார்கள்! யார் ஏசுவார்கள்! என்ன வதந்தியைக் கக்கலாம்! என்ன வசைமொழியைப் பொழியலாம்!—என்று துடியாய்த் துடிக்கிறோமே! அலட்சியப்படுத்தத் தக்கது இந்தக் கழகம் என்று பேசினோமே முன்பு! அது உண்மை என்றால், அந்தக் கழகத்திலே, என்ன நேரிட்டால் என்ன? நமக்கு என்ன கவலை! ஊராருக்குத் தெரிவிக்க, எத்தனை எத்தனையோ பிரச்சினைகள் இருக்க, எந்தக் கழகத்தை ஏறெடுத்தும் பார்க்கமாட்டோம், அதுகுறித்து எதுவும் எமது வாயால் பேசமாட்டோம், பேசுவது தரக்குறைவு, வீணாக அந்தக் கழகத்துக்கு விளம்பரம் நாமாகத் தேடிக் கொடுப்பதாக முடியும் என்றெல்லாம், உச்சாணிக் கிளை அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோமே, அந்தக் கழகம்பற்றி இன்று, உதிர்ந்தது ஏதேனும் கிடைக்காதா, யாராவது இழிமொழி உமிழமாட்டார்களா, அதைச் சிந்தாமல் ஏந்தி வந்திடலாமே என்ற அளவுக்கு இறங்கிவந்துவிட்டோமே! —இதை அறியும் மக்கள் நம்மைப்பற்றி, நமது தரத்தைப் பற்றி, என்ன கருதுவார்கள் என்பதுபற்றிக்கூட, அந்த ஏடுகள் எண்ணிப்பார்ப்பதாகத் தெரியவில்லை!

நாடுவாரற்று, நாட்டிலே செல்வாக்கற்று, மதிப்பாரற்று உள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம்; இதற்கு ஒரு கொள்கை உண்டா? கோட்பாடு உண்டா? எதிர்காலம் உண்டா? ஆதரவு உண்டா? என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தவர்கள், இன்று,

"கழகம் கலகலத்து வருகிறது!"

"கழகத்தின் கட்டுக்கோப்பு உடைகிறது!"

"கழகத்தில் கலாம் ஏற்பட்டுவிட்டது!"

"கழகத்தில் கொள்கைக் குழப்பம் ஏற்பட்டு விட்டது,"

"கழகத்தை இனி நாடு ஆதரிக்காது!"

"கழகத்துக்கு எதிர்காலம் இல்லை!".

என்று தலைப்புகளிட்டும், தகவல்களைத் தீட்டியும், எழுதுகின்றனவே, இதற்கு என்ன பொருள்! ஏதாகிலும் இவர்கள் பேச்சிலே, பொருத்தம், முன்பின் தொடர்பு இருப்பதாக மதியிலியன்றி மற்றவர் கருதுவரா?

**இன்று அமாவாசை! — என்று முதல் வரியில் எழுதத் தொடங்கி, ஒளிவிட்டுக்கொண்டிருந்த நிலவு, மங்கிற்று— கருமேகம் நிலவைப் பிடித்துக்கொண்டது என்று எழுதினால், அந்த 'எழுத்தாளரை' பித்தர்பட்டிக்கல்லவா அனுப்பவேண்டி நேரிட்டுவிடும்!**

கழகம் கவைக்கு உதவாதது! நாடு, அதனைச் சீந்துவதில்லை!!—இந்த அறிவுசால் தீர்ப்பினை முன்பே அளித்துவிட்ட பேரறிவாளர்கள், இப்போது, கழகத்தின் உயரமும் அகலமும், கனமும் குறைகிறது என்ற கணக்கெடுக்க முன்வருவானேன்! அமாவாசை என்று சொல்லியான பிறகு, நிலவு மேகத்தால் மறைக்கப்பட்டு மங்கிற்று என்று எழுதுவது ஏனோ!!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கொள்கை இல்லை!—இது, அண்ட சராசரத்து அறிவைத் திரட்டி உருட்டித் தம் எழுதுகோலில் திணித்துக்கொண்டிருப்பதாகக் கருதிக்கொண்டிருப்போரின் தீர்ப்பு!!

இன்று, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை யான திராவிடநாடு திராவிடருக்கே என்பதை, இன்னின்னர் எதிர்க்கிருர்கள், என்று பட்டியல் வெளியிடுவது, என்ன பேரறிவோ!! கைகொட்டிச் சிரிப்பர், இவர்தம் மன அரிப்பையும், அந்த அரிப்பைப் போக்கிக்கொள்ள, யார் சொறிந்துவிடுவார்கள் என்று இவர்கள் அலேகிற நிலேயையும் காண்பவர்கள்!!

வங்காளியும் — அசாமியனும் வெட்டிக்கொண்டு சாகிருர்கள்!

பஞ்சாபிலே, தாராசிங் உண்ணுவிரதம் இருக்க நேரிட்டால் என்னென்ன பயங்கர விளேவுகளோ கிளம்பக்கூடும் என்ற பீதி படை எடுத்திருக்கிறது.

மராட்டியத்துக்கும் — விதர்ப்பத்துக்கும் மோதுதல் உருவாகிக்கொண்டு வருகிறது,

ஆறறு நீர் பற்றி அண்டை அண்டை நாடுகளுக்கிடையே அமளி நிலேமை ஏற்பட்டிருக்கிறது.

இரண்டில் ஒன்று பார்த்தேவிடுவோம் என்று காஷ்மீர் பற்றி அயூப்கான் முழக்கமெழுப்புகிருர்.

மத்யப்பிரதேசத்திலே கொள்ளேக்காரரின் அட்டகாசம் குறையக்காணேம்.

பீகார் காங்கிரசிலே கோஷ்டிச் சண்டை முற்றுகிறது; முடைநாற்றமெடுக்கிறது,

ஆந்திரத்தில், பழங்குடி மகனே முதலமைச்சர் ஆக்கி விட்டதால் 'உயர் வகுப்பினர்' எதிர்ப்பினேப் பல்வேறு முனேகளிலே கிளப்பியபடி உள்ளனர்.

தமிழ்நாட்டில், டில்லியில் இருக்கமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்ட டி. டி கே.யை, முதலமைச்சர் ஆக்கும் முயற்சி நடப்பதாகக் கேள்விப்பட்டுக், காங்கிரஸ் வட்டாரமே கிலியும் கசப்பும் கொண்டு, பேசிவருகிறது.

கருநாடகத்திலே காங்கிரஸ் கட்டுப்பாடு என்பது பதவிப் பிசின் போட்டு ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது; எந்த நேரத்திலும் பிய்த்துக்கொள்ளக்கூடும் என்கிருர்கள்.

வெற்றிமுரசு கேட்கும் ஒரிசாவிலேயே, முன்னுள் முதலமைச்சர், காங்கிரசுக்குத் துரோகம் செய்தார் என்று இந்நாள் முதலமைச்சர் குற்ற விசாரணே நடத்த ஏற்பாடு செய்கிருர்!

உடலெல்லாம் சிரங்கு! தலேயெல்லாம் ஈரும் பேனும்! அந்த அரிப்பு அடங்க மருந்துதேடாமல், கழகத்தின் காலிலே ஒட்டிக்கொண்டுள்ள கசுமலத்தை வழித்தெடுத்து நாட்டுக்குக் காட்டிடும் காரியத்திலா, ஈடுபடுவது?

பண்டித நேருவுக்கு அடுத்தபடி, யார்? என்பது தலேவலி அளவுக்குள்ள பிரச்சினேயாகிவிட்டது! மொரார்ஜியா? ஜெகஜீவன்ராமா? கிருஷ்ணமேனனு, லால்பகதூரா? என்று புரியவில்லே! முகாம்கள் அமைக்கப்படுகின்றன! கோவிந்தவல்லப பந்த் மறைந்த உடனே, அவர் இருந்து வந்த அறையிலே நுழைந்து மொரார்ஜி கொலு இருக்கிருராம்!! இது, யாரைக் கேட்டுக்கொண்டு செய்தார் என்று நேரு பெருமகனுர் கேட்க; இதற்கு நான் யாரைக் கேட்க வேண்டும்! என்று மொரார்ஜி அலட்சியமாகப் பதில் அளிக்கிருர்.

அடுத்தமுறை, டில்லியில் நான்தான் மந்திரி!—என்று வணிகக் கோட்டத்தாருக்கு கோவை சி. சுப்ரமணியம் செப்பிட, ஐயயோ! நான் என்ன கதியாவது? என்று அரியலூரார் அலறுகிருர் என்கிருர்கள்.

எத்தனே காலம், நான் வெறும் மந்திரியாக இருப்பது!! எவ்வளவு நெருக்கடிகளேக் கடந்திருக்கிறேன்! எத்துணே நெளிவு சுளுவுகள் தெரியும் எனக்கு! இருந்தாலும் ஒரு முறையாவது முதல் மந்திரியாக இருக்க அனுமதிக்கக் கூடாதா! மறுபடியும் வெறும் மந்திரி வேலே தான் என்ருல், ஏன் எனக்கு அது!!—தேர்தலுக்கே நிற்கப் போவதில்லே!!—என்று மனம் நொந்து பேசுகிருராம், பக்தவத்சலம்.

"அத்திப்பழத்தைப் புட்டால் அத்தனேயும் சொத்தை" என்பார்கள்; அதுபோல் இருக்கிறது அந்த இடத்து விவகாரம்! இந்த இலட்சணத்தில், கழகத்திலே காலேயிலே நடப்பது என்ன? மாலேயிலே சூடுவது யாது? பிற்பகல் பேசியது என்ன? யாருக்கு யார் மேல்? கீழே என்ன? மேலே என்ன? என்ற இந்த ஆராய்ச்சியிலா, ஈடுபடுவது!! குற்றுயிராகக் கிடக்கும் கணவனுக்கு, மருந்து கலக்கிக் கொடுக்கவேண்டிய மாதரசி, வெள்ளேச் சேலே வாங்கினுளாமே வள்ளி, காரணம் என்ன? என்று அண்டை வீட்டுக்காரியுடன் வம்பளப்பு நடத்துவது போலல்லவா, ஆளும் கட்சியிலே உள்ள ஆயிரத்தெட்டுக் கோணல்களே நிமிர்த்த முயற்சிக்காமல், கழகக் கோட்டத்தை எட்டி எட்டிப் பார்த்துவிட்டுக், கண்ணுக்குத் தெரிவது, செக்கா? சிவலிங்கமா? என்று ஆராய்ச்சி நடத்துகிருர்கள்;! இதனுல் அடையப்போகும் இலாபம் என்ன? இந்த இதழ்கள், நமது சிறப்புகள்பற்றி இதுநாள் வரை, சிந்து பாடி வந்தன என்ருலாவது, ஐயோ! இப்போது தூற்றித் திரிகின்றனவே என்று கவலேப்பட்டிருக்கலாம். எப்போதும் எதிர்ப்பு எழுதிய ஏடுகள்! இப்போதென்ன புதிதாக, இவைகளில் எழுதப்படுவது கண்டு, பதற இருக்கிறது!! பன்னீர் வியாபாரம் செய்தவன் கரம், காடிப்பானேயில் பட்டால், அடபாவமே! நறுமணம் போய்விடுமே என்று பரிதாபப்படலாம்!! காடிப்பானேயில் விட்டிருந்த கையிலே, கருவாட்டுத் துண்டு எடுத்தால் பரிதாபப்படவா செய்வார்கள்!

காலமெல்லாம், கழகத்தைக் கண்டித்துவந்த ஏடுகள் —இன்று பிறர் உமிழ்வதை எடுத்து வைத்துக்கொண்டு, ஊருக்குக் காட்டுகிருர்கள்! வேறென்ன!!

வீசப்படுபவை வீழ்ந்துபடும்! நிலேத்து நிற்பது, நிமிர்ந்து நிற்கும்!

எதிர் நீச்சலில் ஈடுபட்ட கழகம், எரிச்சலாளர்களின், இருமல், தும்மல், ஏப்பம், கனேப்பு, இவைகளேக் கண்டு கலங்கப் போவதில்லே. எரிச்சலாளரின் இருமல், தும்மல், ஏப்பம், இவைகளே ஊருக்கு எடுத்துக் காட்டிடும், 'மேலான' செயலிலே, ஈடுபடும், ஏடுகளின்மீது எனக்குத் தம்பி! கோபம்கூட இல்லே, பரிதாபம்தான், நிச்சயமாக!!

கற்கள் வீசப்படுவது கேட்டு, சிலேக்கு ஏதேனும் சேதம் நேரிட்டுவிட்டதோ என்று காண, ஓடோடி, ஊரார் திரண்டுவந்தது போலத்தான், ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி ஏடுகளின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ள, கழகத்திடம் வியப்புற்ருேர், விசாரப்படுவோர், கோபம் கொண்டோர் அச்சப்பட்டோர், விளக்கம் தேடுவோர், எனும் பல்வேறு வகையினரான மொதுமக்கள் முன்பு

காட்டியதைவிட அதிக அளவு அக்கரை காட்டுகிறார்கள்!—ஆதரவு திரட்டித் தருகிறார்கள்!

வண்டுபோல் சுற்றுகிறார்கள் நமது தோழர்கள் — உற்சாகம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகியபடி இருக்கிறது.

தம்பி! கழகத்தைக் குறித்து எவரெவரோ ஏதேதோ பேசுகிறார்களே, கழகத் தோழர்களிடம் ஏதேனும் உற்சாகக் குறைவு, எழுச்சியிலே விரிசல், சலிப்பு, இருக்கிறதாஎன்று கண்டறியவே, 'கொள்கை பரப்புவோர்' கூடிப் பேசிட வாரீர் என்று அழைத்திருந்தேன்.

இது மாநாடு அல்ல! இங்கு விவாதங்கள், தீர்மானங்கள், இல்லை! இது பொதுக்குழு அல்ல—செயற்குழுஅல்ல! —கொள்கை பரப்புவோர் கூடிக் கலந்துரையாடலாம் வாரீர் என்று அழைத்திருந்தேன். நூறிலிருந்து இருநூறு பேர் வரையில் வரக்கூடும் என்று நினைத்திருந்தேன். வந்தவர் தொகை ஆயிரத்துக்குமேல்! வர இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்திருந்தோர் தொகை அந்த அளவு இருக்கும்.

இரண்டு நாட்கள்! கண்மூடிக் கண்திறப்பதற்குள் கழிந்துவிட்டன! எத்தனை உற்சாகம்! எவ்வளவு எழுச்சி!!

தருணமறியும் தங்கவேலர் என்று முன்பு ஒருமுறை, 'விடுதலை'யில் நான் தலையங்கமெழுதி இருந்தேன்—காஞ்சிபுரத்திலே, 'பிரிவினை மாநாடு' நடத்தியதற்காக. அந்தத் தங்கவேலர்தான், உறுதுணையாக நின்றார்; உணவளித்தார்; உரையாடல் கேட்டு மகிழ்ந்தார்.

அவருடைய தென்னந்தோப்பிலே அமைக்கப்பட்ட விடுதியில் தோழர்கள் தங்கினர்; கொட்டகையில் கூட்டம் நடந்தது. ஆயிரம் தோழர்கள்! ஐந்தாறு சொற்பொழிவுகளைக் கேட்டுவிட்டுக் கலைந்தனரோ? அதுதான் இல்லை!!

அவர்கள் அனைவரும் தத்தமக்குச் சரியென்றுபட்ட கருத்துக்களை, பல பிரச்சினைகளுக்கு ஆய்வுரைகளை, அரிய யோசனைகளை எடுத்துரைத்தனர்.

கழகம் கலகலத்துப் போய்விட்டது என்பதற்கு அடையாளமா இது!! கண்ணுள்ளோர் கண்டனர்; கருத்துள்ளோருக்கு உண்மை புரிந்தது!!

கழகம் உடைபடுகிறது என்று சில ஏடுகள் எழுதி மகிழ்ந்துகொண்டிருந்த வேளையிலேயே, மெயில் இதழின் தனி ஆய்வாளர், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, அரசியல் நிலைமைகளை நன்கு ஆராய்ந்து விளக்கக் கட்டுரைகள் வெளியிட்டார்.

அதிலே, அவர், ஒவ்வொரு மாவட்டத்திலும், பிளவு, குழப்பம்; பிரிவு, சரிவு, என்று எந்தத், தி. மு. கழகத்தைக் குறித்து இட்டுக்கட்டிக் கூறப்படுகிறதோ, அந்தக் கழகம், வலிவு குன்றாமல், பொலிவுடன், விளங்கி வருவதையும், காங்கிரஸ் கட்சிக்குச் சரியான, அறைகூவல் விடத்தக்க நிலையில் இருப்பதையும், எடுத்துக்காட்டியிருந்தார்.

ஆயிரவர் கூடினர், அதனை மெய்ப்பித்தனர்!!

தத்தமது வட்டாரங்களிலே கழக வளர்ச்சி எந்த அளவு உள்ளது என்பதுபற்றி, மாவட்ட வாரியாக அமர்ந்து, ஆய்வுரை தந்தனர்.

ஆர்வமும் நம்பிக்கையும், எழுச்சியும் எந்த அளவுக்கு இருந்தால், தேர்தலில், தி. மு கழகம் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்தாகவேண்டும் என்பதில்லை என்ற கருத்தைக் கூறியிருப்பார்கள், என்பதை, அப்படி ஒரு கருத்து வெளியிடப்பட்டது, 'எதிர்ப்பு' என்ற தலைப்பிட்டு எழுதும் இதழ்கள், எண்ணிப்பார்க்கவேண்டும்.

பன்னிப்பன்னிச் சொன்னபிறகும், 'பழிபோட்டுத் தலைவாங்கும்' போக்கினர், பிற கட்சிகளுடன், குறிப்பாகச் சுதந்திரா கட்சியுடன், 'கூட்டு' ஏற்பட்டுவிட்டது போலத் தாமாக இட்டுக்கட்டிக்கொண்டு, பிறகு, அதற்கு 'எதிர்ப்பு' ஏற்பட்டதாகக் கயிறு திரித்து, களிப்பைத் தமக்குத்தாமே ஊட்டிக்கொள்கிறார்கள்: எதைச் சுவைத்தோ அவர்கள் இன்புறட்டும், தம்பி! நமது கழகம், எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேரவுமில்லை; அதற்கான பேச்சு நடத்தப்படவுமில்லை; எவரும் அதற்காக ஏற்பாடும் செய்யவில்லை; அழைப்பும் இல்லை!

ஆயிரவர் கூடி, அந்தப்பிரச்சினைபற்றி அரிய கருத்துகளைத் தெரிவித்தது, அந்தப் பிரச்சினைபற்றி, நீயும்நானும், மேலும் சிந்திக்க.

ஆயிரவர் எதிர்ப்புக்காட்டினர், என்று ஓர் மண் குதிரை தேடிப்பெற்று, மகிழட்டும் இதழினர். என் மகிழ்ச்சிக்குக் காரணம், கழகம் கலகலத்துவிட்டது, தேர்தலில் ஈடுபடவேண்டாம்", என்று, மனச்சோர்வுடன், திகிலுடன், சலிப்புடன் நமது தோழர்கள் பேசவில்லை. மாறாகத் தேர்தலில்ஈடுபடுவதற்கான நல்வாய்ப்புகள் மிகுந்திருப்பதைத்தான், மெத்த உற்சாகத்துடன் பேசினர்—தன்னம்பிக்கையுடன்.

கழகத்திலே வலிவு குறைந்துவிட்டது; தூற்றல், தாக்குதல், ஆகியவற்றால் கழகத்தின் வாய்ப்புகள் கெட்டுவிட்டன, என்ற எண்ணம், கவலை, கலக்கம், பீதி, துளியேனும் தோழர்களிடம் இருந்திருக்குமானால், யாருடனாவது கூட்டுச் சேர்ந்து, எந்தெந்தக் கட்சிகளின் துணையையாவதுகொண்டு, தேர்தலில் நிற்கவேண்டும்; பல கட்சிகளின் 'கூட்டும்' உதவியும் இருந்தால்தான், இந்தத் தேர்தலை நாம் சமாளிக்க முடியும்; தனியே நின்று தேர்தலில் வெற்றிதேடிக்கொள்ள முடியாது என்ற முறையில் பேசியிருப்பர். மாற்றார் கூறுவதுபோலவும், மனபேதப்பட்டோர் விரும்புவதுபோலவும், கழகம் வலிவு குன்றி இல்லை! எனவேதான், தோழர்கள், நமக்குள்ள வலிவு கொண்டு நாம் தேர்தலில் ஈடுபடலாம் என்ற எழுச்சியுடன், நம்பிக்கையுடன் பேசினர்!

ஆயிரவர் கூடிப்பேசி ஆர்வம் கண்ட நிகழ்ச்சிமட்டுமல்ல, தம்பி! அடுத்த திங்கள், இருக்கிறது, நல்விருந்து: பொது மாநாடு! எத்தனை இலட்சம் மக்கள் கூடப்போகிறார்கள் என்பதை எண்ணிப்பார்!!

வெட்ட வெளியிலே கொட்டும் மழையிலே கூடினோம், முன்னேற்றக் கழகம் துவக்க.

மூன்றாவது பொதுமாநிலமாநாடு கூடுகிறது! இதற்கு, மதுரையம்பதியில், தோழர் முத்துவுடன் சென்று, திடல் தேடினேன்—மதுரை நகருக்குள், நாம் விரும்புகிற அளவு பெரிதான, வசதியான, திடல் இல்லை!

வளர்ச்சியின் வகையும் அளவும் தெரிகிறதல்லவா!!

திருப்பரங்குன்றம் செல்கிறோம், மாநாடு நடத்த!

மதுரையிலிருந்து எத்தனை கல் தொலைவு என்கிறாயா?

அது எங்கே உனக்கும் எனக்கும் தெரியப் போகிறது!! திருப்பரங்குன்றமே புதிய மதுரையாகக் காட்சிதரப் போகிறதே!! இலேசான ஆட்களா, மதுரைத் தோழர்கள்! திருப்பரங்குன்றத்தைத் திருநகர் ஆக்குகிறார்கள்—திருவிடமாக்குகிறார்கள்!!

## எழிலூர்

வெட்ட வெளியிலே, கொட்டும் மழையிலே கழகம் துவக்கினோம்! இன்று மாநாட்டுக் கொட்டகை அமைக்க ஊர் நடுவே இடமில்லை!! எனவே, திருப்பரங்குன்றம் பெரியதோர் திடலை எழிலூர்ஆக்குகிறார் வரவேற்புக்குழுத்தலைவர் மதுரை முத்து. தோழமைமிக்க தொண்டர்கள், உங்கள் தேவைகளைக் கவனிக்க.

காவியமும் ஓவியமும், இசையும் கூத்தும் எழுச்சியூட்டும் பற்பலவும், உம்மை மகிழ்விக்க!

எந்நாளும் மறக்கொணாத திருநாளாகும், திருப்பரங்குன்றம் மாநாடு!

தரணியாண்ட நாம் தாழ்ந்திருக்கிறோம், நிலை அறிந்ததால் நிமிர்ந்து நிற்கிறோம்!

பகைவர் சீறிக்கொண்டு பாய்ந்து வருகிறார்; பரணி பாடுவோம்! பகையை வெல்லுவோம்! வாரீர் திருப்பரங்குன்றம்!—என்று கூறு, தம்பி! நாட்டினருக்கு!!

## நேரு அறியட்டும்

நேரு வருகிறார் பரிவாரங்களுடன் மதுரைக்கு, திருப்பரங்குன்றம் மாநாடு குறித்து அவர் அறிந்து கொள்ள முற்படுவார்!

அவர் செவியில், மிகப் பெரிய மாநாடு! மகத்தான ஏற்பாடு! ஏற்றமிகு எழுச்சி! வெள்ளம்போல் வீரர்கள்! என்ற செய்தி விழவேண்டும்!

திருப்பரங்குன்றம் வருவது திராவிடரின் நீங்காக் கடமை.

வடபுலத்துத் தலைவர் திருஇடத்து மாண்பு அறியத் திருப்பரங்குன்றம் மாநாடு!

இதுவரை எவரும் காணாத அளவுடன், அழகுடன், சுவையுடன், பயனுடன், நடைபெற்றது என்ற நற்பெயர் கிடைத்திடவேண்டும்.

கழகத்தின் மாண்பு காத்திட அனைவரும் வாரீர் திருப்பரங்குன்றம் என்று தோழர்க்கெல்லாம், அழைப்பு அனுப்பு, தம்பி! மறவாமல்.

## அறைகூவல்

வண்ணமுகப்பு, வரவேற்பு வளைவுகள் கண்ணைக் கவரும் கவர்ச்சியுடன்!

நிழலது தந்து நம் நிலையினை உணர்த்தும் பெரியதோர் பந்தல், அமர்ந்திருந்து அரிய உரைகள் கேட்டிட!

வரிசை வரிசையாகக் கடைகள்! புதியதோர் அங்காடி!

உலவி மகிழச் சாலைகள்! உண்டு களைப்பாற விடுதிகள்! மகிழ்வூட்டும் கலையரங்கம்! கருத்தூட்டும் கண்காட்சி!

இன்பத் திராவிடம் பெற்றிட வாரீர் என இருவண்ணக் கொடிகள் ஆடி அழைத்திடும் அழகுறும் காட்சி!

விடுதலைப் போருக்கான அழைப்பு வத்திடுங் காலை வீறுகொண்டெழுந்திடப் போகும் வீரர்தம் கூட்டம் உலா வரும் காட்சி!

இவை எலாம் உமக்காக!

உமது உழைப்பு நாட்டுக்காக!

திருப்பரங்குன்றம், மாநாடுமட்டுமல்ல; நமது இன மனமகிழ் மன்றம்!

திருப்பரங்குன்றம், ஆட்டிப்படைக்கும் வடவருக்கு, அறைகூவல்!

அடுத்துக் கெடுத்திடும் நினைப்பினர்க்கு, எச்சரிக்கை!

விட்டுச் சென்றவர்கட்கு, அறிவுரை!

வீரர் குழாத்துக்கு, அழைப்பு!

திருப்பரங்குன்றம், பொறுப்புணர்ந்தோர்க்கு!

## அகமும் முகமும் மலர!

பகற்கனவு என்றார் பண்டிதர்! பாதந்தாங்கிகளும் அதனையே கூறுகின்றனர்! ஏன் கூறினர் அதுபோல்? நாம் எதிர்ப்புக் கண்டு அஞ்சுவோம், ஏளனம் கேட்டுத் துஞ்சுவோம், பழிச்சொல் கேட்டுப் பதறுவோம், பயணம் தடைப்படும் என்று எண்ணியதால்! தி.மு.கழகம், அஞ்சி அஞ்சிச் சாவோரைக் கொண்ட அமைப்பா! அல்லது உயிரிழக்க அஞ்சாத உத்தமரின் உறைவிடமா? பித்து மனம் கொண்டோரா; சித்தம் தடுமாறுச் சீலரா?

திருப்பரங்குன்றம் எடுத்துக்காட்டும் எதையும் தாங்கும் இதயம் கொண்டவரின் பண்பகம் தி. மு. க. எனும் உண்மையை.

கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! கடமை அழைக்கிறது! உலகு கவனிக்கிறது! ஊராள்வோர் உற்று நோக்குகிறார்கள்; உலைவைப்போர் முணுமுணுக்கிறார்கள்!

வாளுக்கும் வேலுக்கும் மட்டும் அல்ல, வஞ்சனைக்கும் அஞ்சிடமாட்டோம் என்று அணியணியாய் வந்து கூடி அறிவிப்பீர். அவனிக்கு.

அகமும் முகமும் மலர! தரமும் திறமும் விளங்க! வீரமும் தீரமும் மிளிர! வெற்றிப் புன்னகை தவழ! வீரர்காள்! விரைந்து வாரீர்! திருப்பரங்குன்றம்!!--- தம்பி நாடெங்கும் சென்றிடுவாய், நல் அழைப்புத் தந்திடுவாய்.

## துணிவோர் தொகை காட்டிட

பொன் இருந்திட, பொருள் இருந்திட, திருவிடத்திலே, போக்கற்ற நிலையில் மக்கள் இருந்திடுவதேன்!

கண் இருந்தும் ஒளி இருந்தும், கட்டிப் போட்டு விட்டால், மலரும் மானும், கனியும் பிறவும், காண முடியுமா? திராவிடம் கட்டுண்டு கிடக்கிறது! திராவிடர் தேம்பித் தவிக்கின்றனர்! திராவிடநாடு திராவிடருக்கே! முழக்கம் இது; வெற்றி எப்போது? வேலுக்கும் வாளுக்கும் அஞ்சா வீரம், சூதுக்கும் சூழ்ச்சிக்கும் சாயா நெஞ்சம், பதவிக்கும் பவுனுக்கும் இளிக்காப் போக்கு, இவை கொண்டவர் தொகை வளர்ந்துவிட்டால்! கொடிகட்டி நாம் ஆள்வோம் திராவிடத்தை! விடுதலை வரலாறு தரும் பாடம் இது. இன்பத் திராவிடம் பெற்றிடத் துணிவோர் தொகை எவ்வளவு என்பதைக் காட்டிடத் திருப்பரங்குன்றம்.

## திராவிட முரசொலிக்க

பரலோகத்துக்கு வழி காட்டவேண்டிய பாதிரியார், அரசு அமைக்கும் காரியத்தில் ஈடுபடலாமா! என்று ஒருவன் கேட்க, பரலோகம் அனுப்பித்தான் வருகிறார் பாதிரியார், அப்பாவிகளை நம்மீது மோதவிட்டு, சாகடித்து, என்று கேலி பேசினன் மற்றொருவன், அன்று! இன்று, சைப்ரஸ் தனிநாடு, தனிஅரசு, மகாரியாஸ் பாதிரியார் விடுதலை பெற்றளித்தார்.

சைப்ரஸ் சிறுதீவு! திராவிடம் ஒப்பற்ற நாடு!

சைப்ரஸ் விடுதலை பெற்றது! திராவிடம் இன்றும் அடிமை! ஏன்? திருப்பரங்குன்றம், இதை ஆராயத்தான். ஐயம் கொண்டோர் விளக்கம்பெற, அச்சம்கொண்டோர், வீரம்பெற, அவனிக்கு நமது முயற்சியை அறிவிக்க, திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம், திக்கெட்டும் திராவிட முரசு ஒலித்திட!

## திராவிடர் எனில்........

முடியுடை மூவேந்தர் இவர் முன்னோர்; இன்று, நமது அடிபணிந்து கிடக்கின்றனர் இழிந்து! டில்லி கூறுகிறது---நாம் கேட்கிறோம். உயிரும் இருக்கிறது! உணர்வும் இருக்கிறது! எனினும் மானம் காத்திடுவோம், தாயகம் மீட்டிடுவோம், அரசு அமைத்திடுவோம் என்று ஆர்த்தெழத்தான் வேளை வரவில்லை! அது எப்போது? விடுதலை, எம்முறையில்? அப்பணிபுரிய, எத்துணை வீரர்? இவைகளுக்குப் பதில் காண, திருப்பரங்குன்றம்!

திராவிடர் எனில் வாரீர்! விடுதலை விரும்பிகள் எனில் வந்திடுவீர், திருப்பரங்குன்றம்!—என்று அழைத்திடு வாயன்றோ, இன்பத் திராவிடத்துள்ளோரை எல்லாம். உனக்கா தெரியாது!! தாயகம் விடுபடத், தனி அரசு கண்டிடத் தளராது உழைத்திடத், திரண்டு வாரீர் திருப்பரங்குன்றம் என்று இப்போதே அழைத்துக் கொண்டுதானே இருக்கிறாய்!!

## ஆர்த்தெழுவோம்

நாமிருக்கும் நாடு நமது என்றுரைத்திடா நாவும் நாவென்றுரைத்திட நல்லோர் கூசுவர்.

நாமிருக்கும் நாடோ நம்மிடம் இல்லை. நம்மை வடவர் ஆளுகின்றனர்; சகிப்பதற்கில்லை!

பொன்னை, பொருளை இழந்திடலாம், உரிமை இழப்பதோ? உரிமையற்ற வாழ்வு கண்டு உலகம் சிரிக்காதோ? இந்த உண்மைதனை உணர்ந்தோரெல்லாம் திரண்டு வருகிறார், உரிமைப்போரின் அணிவகுப்பை அமைக்க வருகிறார்! திருவிடத்தின் விடுதலைக்கு உழைத்திட நாமே திருப்பரங்குன்றம் சென்று ஆர்த்தெழுவோமே!!

## எல்லாக் கண்களும் அப்பக்கம்

எழுச்சியின் அளவு, வகை, கண்டு களித்திட ஏற்ற இடம், திருப்பரங்குன்றம். எல்லாக் கண்களும் அப்பக்கம்! எல்லார் எண்ணமும் அதுபற்றி! இன்றே நண்பரைக் கண்டிடுவீர்! மாநாடு காண அழைத்திடுவீர்! குடும்பத்துடன் வந்து காணவேண்டிய குதூகலபுரி திருப்பரங்குன்றம்.

கார்கண்ட உழவன்போல், கதிரவன் கண்ட கமலம் போல, கண்டதும் விழியில் மகிழ்ச்சி பொங்கும், வீரரின் நெஞ்சினில் விடுதலை ஆர்வம் கொந்தளிக்கும், அணிவகுப்பின் திறம் கண்டு. ஆர்வத்தின் அளவு கண்டு. விழிப்புற்ற திராவிடத்தின் வீரரெலாம் கூடுகின்றனர், வெற்றிக்கு வழி காண, திருப்பரங்குன்றம்.

மரபு அறிந்தவர், மானம் காப்பவர், இனம் அறிந்தவர், இலட்சியம் மறவார், உழைத்திடுபவர், கழைக் கூத்தரல்ல!! இன்னுயிர் கொடு! இன்பத் திராவிடம் பெற! கட்டளை அஃது எனில், காளையரும் கன்னியரும் போட்டியிடுவர், உயிர்தர, உரிமைபெற! முதியவர் இளைஞரை முந்திக்கொண்டோடி வருவர் எந்தையர் நாடு விடுதலை பெற்றிட ஈந்தேன் இன்னுயிர் என்று கூறியே!

## இல்லங்களிலே

தம்பி! இல்லங்களிலே இப்போதே நடைபெறும் இன்ப உரையாடலை, நான் அறிந்துதான் இருக்கிறேன்.

"நேற்றிருந்த கோபம்மாறி, நேர்த்தியானதே! முகம் பார்த்திடும்போதே! கேட்கக் கேட்க மொழியும் பாகாய், இனிக்குது இன்று"

"காரணத்தைக் கூறிடவும் வேண்டுமோ அத்தான்! கண்டிடலாம், மாநாடு, என்றுரைத்தீரே!"

இல்லங்களிலே இன்ப உரையாடல், திருப்பரங் குன்றம் சென்றிடலாம், திருவிடத் தீரரைக் கண்டிடலாம், தேன்நிகர் பேச்சினைச் சுவைத்திடலாம், உரிமைக்கோர் வழி கண்டிடலாம், என்பதுபற்றியே! செந்தாமரையின் அழகு, கண்டபோது! மல்லிகையின் மணம் முகர்ந்த போது! செங்கரும்பின் சுவை உண்டபோது! தாயகவிடுதலைக்கான மாநாடு அளித்திடும் மகிழ்ச்சி, எண்ணிடும் போதெல்லாம் இனிக்கும்! பேசிடும் வாய் மணக்கும்! ஏன்? மாநாடு, மானமும் மரபும் காத்திடும் மறவர், கூடி எழுப்பிடும் இலட்சிய முழக்கம் நெஞ்சினில் பதிந்து, நம்மை, வீரராய் தீரராய், திராவிடராய் ஆக்கிடத்தக்க கொள்கைக்கோட்டம், திருப்பரங்குன்றம்! தம்பி! திருப்பரங்குன்றம், திராவிடர்க்காக! அறிவாய், நீ! அறிவிப்பாய், மற்றவர்க்கு!!

## குடும்பத்துடன்

வருகிறேன், திருப்பரங்குன்றம்! செல்கிறேன் திருப்பரங்குன்றம்! செல்வோம் திருப்பரங்குன்றம்! இல்லங்களின் இன்றையப்பேச்சு இது. வரவேற்புக்குழுத்தலைவர் மதுரை முத்து, பொட்டல்காட்டைப் பூம்பொழிலாக்கக் காத்திருக்கிறார், களிப்பூட்ட! இசைகேட்டு இன்புறுவோம்! வீரக்காதைகள், விடுதலை வரலாறுகள், இலக்கியச் சுவையுடன்!! ஆட்சிமுறை, அறவழி ஆகியவை பற்றிய பேருரைகள். மாநாட்டிலே, கெனியாடா; திவேலரா, நாசர், ஹோசிமின், போர்க்யூபா, மகாரியாஸ், என்க்ருமா மற்றும் எண்ணற்ற விடுதலை வீரர்கள், வெற்றிபெற்ற வரலாறுகேட்டு, உணர்ச்சிபெறப்போகிறோம். புதிய நம்பிக்கை பெற இருக்கிறோம். நாடகங்கள் உண்டு, நற்கருத்தளிக்க. கழகக்காவலர் அனைவரும் கூடுமிடம், திருப்ப்ரங்குன்றம்! வாழ்நாளில் மறக்கொணாத அரிய நிகழ்ச்சி! நெஞ்சை அள்ளும் எழில் பல மிஞ்சும் வண்ணக்களஞ்சியம், திருப்பரங்குன்றம்! வீட்டிலே சிலர் விம்மிக்கிடக்க, நீவிர் மட்டும் விருந்துண்ணவருவது அழகல்ல! குடும்பத்துடன் வருக, திருப்பரங்குன்றம்!—என்று கூறிடத்தோன்றுகிறதல்லவா!!

## வீரருக்கு அழைப்பு

கண் திறந்தது! கருத்து மலர்ந்தது! கழகம் அழைத்தது! கடமை புரிந்தது! எழுந்தனர் வீரர்! எழுப்பினர் முழக்கம்! இன்பத்திராவிடம் எமக்கே, என்று.

அவரெல்லாம் கூடுமிடம், திருப்பரங்குன்றம்!

அறமறிந்தோர் மாமன்றம், திருப்பரங்குன்றம்!

விடுதலைக்கு வழிகாண, திருப்பரங்குன்றம்.

எண்ணம் வண்ணமாக, திருப்பரங்குன்றம்!

கூனிக்கிடந்திடமாட்டோம், குமுறிச் செத்திடமாட்டோம், கொத்தடிமையாகிடமாட்டோம்! சித்தம் தடுமாறிடவும்மாட்டோம்! இத்தரையில் எத்தனையோநாடு! எங்கட்கு இல்லை எம்நாடு! பெற்றிடுவோம் திருநாடு தனை, குற்றுயிராகும்வரை போராடியேனும்! பண்பாடக் கேட்டிடுவீர்! திண்தோளர் கூடிடுவீர்! எழுவோம், பகைவெல்வோம்! இதற்கான அறிவிப்பு திருப்பரங்குன்றம் மாநாடு. வீரர்க்கு அழைப்பு, விடுதலை அணிவகுப்பு: **திருப்பரங்குன்றம்!**

## தீரர் தோற்றதில்லை

கருப்பர் என்றனர், இன்று வெள்ளையர்முகம்வெளுத்தது பயத்தால். ஏன்? கட்டுண்டுகிடந்தவர்கள், வெட்டுண்டு மடிவதேனும், விடுதலைக்கே உழைப்போம் என்று கூறிவிட்டார். இடியோசை கேட்ட நாகமென வெள்ளையர், விரண்டுவிட்டனர். சுடுகிறார்கள், சாகிறார்கள்; எனினும், செத்தவர்போக மிச்சம்உள்ளவர், விடுதலை, விடுதலை விடுதலை, என்றே முழக்கமிடுகின்றனர். குண்டுகள்தீர்ந்துவிட்டன---சாவுக்கஞ்சா வீரர் தொகை குறையவில்லை. முழக்கமிடுகின்றனர், எமது நாடு, எமது அரசு, எமது உரிமை. திருப்பரங்குன்றம் வாரீர், விடுதலை பெற்றோர் புகழ்பாட, விடுதலைக்கான பாடம்பெற, தீரர் தோற்றதில்லை, திருவிடரும் தோற்கமாட்டார், **திருப்பரங்குன்றம்** இதை உலகுக்கு உணர்த்த.

## பொங்கி எழுகிறது

தலைகனத்தோர் ஆட்சிக்கு முடிவுவைத்து, தனிநாடு சமைத்திடுவோம் வாரீர் என்று, பன்னிரண்டு ஆண்டுகளாய்ப் பேசிவந்தோர், இன்று பகைவர் பரிகசிக்கப் பேசுகின்றார். அவரல்ல கழகம், என்று அறிவிக்க அனைவருமே வந்திடுவீர் மாநாட்டுக்கு. திருப்பரங்குன்றம் தெரிவிக்கட்டும், விடுதலை உணர்ச்சி மறையவில்லை, மங்கவில்லை; மாறாக,பொங்கி எழுகிறது புதியவேகத்துடன்--மாற்றாரும் அவரை அடுத்துப் பிழைப்போரும் அகலக் கண்திறந்து, ஆச்சரியப்படத்தக்க அரியதோர் அணிவகுப்பு திருப்பரங்குன்றம், எனும் பேருண்மையை. உழைத்த உத்தமர்களே, உம்மை இகழ்கிறார்கள்---கொள்கைக் குன்றுகளே, உம்மைக் கேலிபேசுகிறார்கள், இனமறிந்த ஏந்தல்களே, உம்மை ஏளனம் செய்கிறார்கள். கழகம் கலகலத்துவிட்டதாம், அணிவகுப்புச் சிதறிவிட்டதாம், நம்பிக்கை நசித்துவிட்டதாம். பதில் என்ன தருகிறீர்கள்? பேசவேண்டாம், ஏசவேண்டாம், திருஇடம் காணவிழைவோர் அனைவரும் திருப்பரங்குன்றம் உலா வருவீர், பேச்சு அடங்கிக்கிடப்பர் மாற்றாரின் கைப்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

பாவைகள். மகத்தான பொறுப்பு, கழகமாண்புகாப்பது. கழகம் அழைத்தால், அனைவரும் எழுவோம் என்பதை அறிவிக்க, திருப்பரங்குன்றம்.

## அறவழி

தோகையில்லை, மயில்தான். குளிர்ச்சியில்லை, நிலவுதான். ஒளியில்லை, மணிதான். சுவை இல்லை, கனிதான். அணியில்லை, பாட்டுத்தான். மழலை இல்லை, குழவிதான். மணம் இல்லை, மலர்தான். கூறுவரோ எவரேனும்? கேட்டிடின் கைகொட்டிச் சிரிப்பரன்றோ. ஆனால், தனி அரசு இல்லை, திராவிடர்தான், என்றன்றோ இன்றுள்ள நிலை. கேலிக்கூத்தல்லவோ, கேவல நிலைமையன்றோ. பகை முடிப்போம், பழி துடைப்போம், அறவழி நின்று. திருவிடம் பெறுவோம். திருப்பரங்குன்றம் வழிகாட்டும் கோட்டம்.

## வீரக்கோட்டம்

அச்சம், அவனை அடக்கியதில்லை. ஆசை அவனைக் கட்டுப்படுத்தியதில்லை. அரண்மனை கண்டு அவன் சொக்கினதில்லை. மாளிகை தரும் மதுரவாழ்வு வேண்டினவனல்ல. நிந்தனை தந்தனர்; நிலாச் சோறு என்றான். வேதனை வேண்டுமளவு உண்டான்; எனினும், "திராவிட நாடு திராவிடர்க்கே" எனும் இலட்சியத்தை மறந்தானில்லை. அவனே திராவிடத் தீரன். திராவிடத்துத் தீரரெல்லாம் திரண்டு வருகின்றார், திருப்பரங்குன்றம். தாயகத்தின் தளை நொறுக்கிட, தன்மானத் திறம் பெருக்கிட, தனி அரசு தனைச் சமைத்திட, நான், நான், நானுந்தான், என்று முழக்கமிடும் வீரர் கூட்டம் திரண்டிடும் அரிய கோட்டம், திருப்பரங்குன்றம். இலட்சக்கணக்கான இல்லங்களில் ஏற்பாடுகள்---இப்போதிருந்தே. இளைஞருடன் முதியவர் போட்டியிடுகின்றனர். ஆடவரும் ஆரணங்குகளும் பயணப்படுகின்றனர், தாயக மீட்புக்கான சூளுரை எடுக்க, திருப்பரங்குன்றம்.

தம்பி! உன்னைக்காண, நான் வருகிறேன், திருப்பரங்குன்றம் என்று சொல்லவா வேண்டும். நீதான், என்னைக் கட்டிப் போட்டுவிட்டிருக்கிறாயே, உன் அன்பினால்.

திருப்பரங்குன்றம் மாநாடு எழிலுடன் ஏற்றத்துடன் நடைபெற, உன் சீரிய கருத்துரைகளை எடுத்துரை, தி. மு. கழகம், கூட்டு முயற்சியால் ஈட்டிய கருவூலம் உள்ள பெட்டகம். இங்கு 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்ற பேச்சுக்கு இடம் இல்லை. அந்தப் போக்கு முற்றினால், பொது வாழ்வுக்கு வந்தது பெருந் தொல்லை, துவக்க முதல், நாம் கட்டிக் காத்துவரும் 'தோழமை'--- திருப்பரங்குன்றத்தில், கோடையிலே இளைப்பாறிக் கொள்ளக் கிடைத்த குளிர்தருவாய், இதயப் பூங்காவில் உள்ள எழில் மலராய், நமக்கு இனிமை பயக்கட்டும். பயணத்தில் மிக முக்கியமான கட்டம் வந்துள்ளோம். திருப்பரங்குன்றம், மேற்கொண்டும் பயணமாகி வெற்றியூர் சென்றிடும் அறிவாற்றலை நமக்கெல்லாம் அளிக்கட்டும்.

மாற்றார் தம் மனம்போன போக்கிலே ஏசட்டும், பேசட்டும்; செவிபுகவிடாதே. நாம் மேற்கொண்டுள்ள பணி, மகத்தானது. தூய்மையுடன் கூடிய தோழமை கலந்த, கூட்டு முயற்சி மட்டுமே, நமக்குள்ள அழியாச் செல்வம். கண்ணீருடன் பிறந்தோம். அந்தக் கண்ணீரும் கேலி செய்யப்படுகிறது. அது கேட்டுக் கண்ணீருக்கிடையிலே ஓர் புன்னகையும் பூத்திடும் முகம் காட்டுகிறோம். நம்மைநிந்திக்கிறார்களேஎன்றுகலக்கமடையாதே. நாராச நடையாலே, நம்மை அழிக்கநினைத்தோர்கள் பலர். நாம் அழிந்தோமில்லை. காரணம், நம்மை நாட்டுக்குரியதோர் நற்பணியில் ஈடுபடுத்திக் கொண்டுவிட்டோம்.

**ககனப்பூ வந்திமகன், கொய்தானும்**
**அதைக்கண்டு குருடன் அம்பால் எய்தானும்**
**செகமிகை ஊமையனும் வைதானும்**
**அதைச் செவிடன் கேட்டு நகை செய்தானும்**
**கரமில்லான் வாதியைப் பிடித்தானும்**
**காலில்லான் உதைத்துதைத்து இடித்தானும்**
**சிரமில்லாதவன் கடித்தடித்தானும்**

வேதநாயகம், பொய்யுரைப்போரை, நகைச்சுவையுடன் கூடிய பாடலால், சாடினார், குருடன் குறிபார்த்து அம்பு எய்கிறான்! ஊமை, திட்டுகிறான்! செவிடன் அதைக் கேட்டுச் சிரிக்கிறான்! கரம் இல்லாதவன் ஆளை இழுக்கிறான்! கால் இல்லாதவன் எட்டி உதைக்கிறான்! தலையில்லாதவன். ஆளைக் கடிக்கிறான்!!

நம்புவார்களோ! நம்பமாட்டார்கள்!

கூறுவரோ? இதனையே அல்ல என்றாலும், இது போன்ற பொய்யுரைகளைக் கூறுவர் — எங்கு? எவர்? வழக்குமன்றத்தில்! காசாசையால்!

நம்மைப்பற்றிப் பேசப்படுவன, இவைபோன்றன; நம்பமுடியாதன! எனவே, நாம், பதிலுரை தரத் தேவையில்லை! நாடு, நல்லதீர்ப்பளிக்கும்; நாம் நமது நினைப்பைத் திருப்பரங்குன்றம் பக்கம் திருப்புவோம்: மாநாடு நமக்கு மாண்பளிக்கும்.

அண்ணன்,

அண்ணாதுரை

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.